19 வது வருடத்தில்
விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 பாலம் 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2009

# கனேடிய ஊடகங்களும் தமிழர்களும்

இலங்கைத்தமிழர்கள் பக்கம் எட்டியே பார்க்காது மௌனம் சாதித்து வந்த கனேடிய ஊடகங்கள் தற்போது இலங்கையில் நடைபெறும் இன ஒழிப்பு நடவடிக்கையை பார்க்க சகிக்காமலோ அல்லது அமெரிக்க அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தாலோ சற்று எட்டிப்பார்க்க தொடங்கி உள்ளன. கனடாவில் ஆங்கிலமொழி நன்கு தெரிந்த தமிழ்மக்கள இச்சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி தமது கடமையை செய்ய முன்வர வேண்டும். நாங்கள் எமதுகடமையை சரிவரச் செய்யாமல் தொடந்தும் கனேடிய நிறுவனங்கள் எங்கள் செய்திகளை போடுவது இல்லை என குறை கூறுவது மிகவும் தவறு.

கனேடிய ஊடகங்கள் எல்லாம் தங்களுக்கு என இணைய செய்தித்தளங்களை வைத்துள்ளன. அவற்றில் செய்திகள் உடனுக்குடன் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. அச்செய்திகளின் இறுதியில் எல்லா செய்தி நிறுவனங்களுமே வாசகர்களது குறிப்புக்களை (Comments) பதிவு செய்ய கூறுகின்றன. இது வழக்கமாக கோரும் Feedback மின் அஞ்சல் கோரிக்கை அல்ல. இது ஒவ்வொரு செய்திக்கும் பிரத்தியேகமாக குறிப்பு பதிவு செய்யும் முறையாகும். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட குறிப்புகளின் எண்ணிக்கை அச்செய்தி தலைப்பிலேயே அடைப்புக்குறிக்குள் இடப்பட்டிருக்கும்.

உதாரணமாக பின்வரும் செய்தி நிறுவனங்களைப் பார்ப்போம்
www.cbc.ca
www.theglobeandmail.com
www.thestar.com

இவை மூன்றும் கனடாவிலேயே மிகவும் பிரபல்யமானதும் பெரும்பாலான கனடிய மக்களால் மதிக்கப்படுவதும் பார்க்கப்படுவதுமான ஊடகங்களாகும். www.cbc.ca என்ற செய்தி நிறுவனத்தின் ஜனவரி 27, 2009 நாள் உலக செய்தியில் வந்த இரண்டு தலைப்புகளைப் பார்ப்போம்.

" Air strike bombing threaten fragile gaza ceasefire" Comments 444, Recommend 47 இந்த செய்தி வெளியாகி சில மணித்தியாலங்களில் 444 பொதுமக்கள் இச்செய்தியை பற்றி குறிப்புக்களை எழுதி உள்ளார்கள். 47 பொதுமக்கள் இச் செய்தியை மற்றவர்கள் வாசிக்கும்படி தூண்டியுள்ளார்கள்.

**இன்னொரு செய்தி தலைப்பை பார்ப்போம்.** "300 wounded in Sri Lanka artillery fire, officials say" comments 17, recommend 16 இந்த செய்தி வெளியாகி சரியாக 24 மணித்தியாலத்திற்கு பின்னரும் ஆக 17 பொதுமக்களே குறிப்புக்களை எழுதியுள்ளார்கள். அதிலும் சிலர் தமிழ் மக்களுக்கு எதிராகவே குறிப்புக்களை எழுதியுள்ளார்கள். கனடாவில் ஒரு இலட்சத்திற்கு மேல் நன்றாக ஆங்கிலம் தெரிந்த தமிழ் மக்கள் இருந்தும் ஏன் 17 பேர் மட்டுமே குறிப்புக்களை எழுதியுள்ளார்கள்.

Gaza இல் குண்டுமழை பொழியும் போது அச்செய்தி வெளியாகி ஒரு சில மணித்தியாலத்தில் 1,500 இற்கு மேற்பட்ட குறிப்புக்கள் CBC இல் வந்திருந்தது. இக்குறிப்புக்களை எழுத ஒரு மின் அஞ்சல் முகவரி மட்டுமே தேவை. உங்கள் பெயரைக் கூட தெரிவிக்க தேவையில்லை. நீங்கள் புனைபெயரில் குறிப்புக்களை எழுதலாம். எல்லா செய்தி நிறுவனங்களும் தங்களுக்கு வரும் குறிப்புக்களின் எண்ணிக்கையை கொண்டே அவற்றை இணையத்தளத்தில் செய்தியாகவோ அல்லது முதன்மை செய்தியாகவோ வைத்திருக்கின்றன. கடந்த சில நாட்களாக வந்த இலங்கை தமிழ் மக்கள் பற்றிய கனேடிய ஊடகங்களின்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# மரணபயத்தில் சிக்கித்தவிக்கும் வன்னி மக்கள்!

இலங்கை வன்னியில் போர் நடைபெறும் இடங்களில் மரண பயத்தில் சிக்கி தவிக்கும் இரண்டரை இலட்சம் மக்களின் உயிரை பாதுகாப்பதற்கு மிகவும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். என ஐ.நா. சபை மீண்டும் இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

"இலங்கை வன்னியில் போர் நடைபெறும் இடங்களில் மரண பயத்தில் சிக்கி தவிக்கும் இரண்டரை இலட்சம் மக்களின் உயிரை பாதுகாப்பதற்கு மிகவும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். போரில் காயமடைந்த மற்றும் நோயால் அவதிப்படும் மக்களை விரைவாக மீட்பதற்காக சிறப்பு வாகனங்களை அமர்த்த ஐ.நா. திட்டமிட்டு இருக்கிறது.

முல்லைத்தீவு காடுகளில் சிக்கி தவிக்கும் அந்த மக்களை மீட்க வேண்டும். காயமடைந்த மக்கள் மீட்கப்பட்டு வவுனியா நகரில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவார்கள். ஐ.நா. சபையின் இந்த செயலுக்கு இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அப்பாவி தமிழர்கள், போர் முனையில் சேவை செய்து வரும் தொண்டு நிறுவன ஊழியர்களின் பாதுகாப்புக்கு முழு முன்னுரிமை அளிக்க வேண்டும்" என்று இலங்கை அரசையும்,


தொடர்ச்சி 03ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221


REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.

STANDARD MORTGAGES INC
ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520


Reliance
Financial & Investment Co Inc
MORTGAGES
▸Residential ▸Commercial ▸Line of Credit ▸Low Interest ▸40 Lenders ▸Pre-approval ▸Re-finance ▸Debt Consolidation ▸Bad or No Credit OK ▸Self-employed OK ▸New Immigrant OK ▸Private Funds also OK
We GET YOU MORTGAGE even if Banks say 'No'
INSURANCE
▸All Insurance Companies ▸Life ▸Critical illness ▸Disability ▸Health & Dental ▸Travel ▸Visitors ▸Mortgage
RESP ▸Govt. grants ▸Highest scholarships paid ▸Flexible
RRSP ▸Excellent growth ▸Reduced taxes ▸Investment loans
Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES
Email: reliancefico@ymail.com, Fax: 647-342-2399

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM
Veedu Mortgages Inc.


Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated


கதிர்
GTA Square
SOLD OUT !
Last 7 Units Available
Middlefield & Finch
24hr. 416.856.6900
Office: 416.321.6969
Email: kathirs@rogers.com
Call me for a change
Don't Miss Out
Kathir S. Kathirkamanathan P.Eng.
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., #206, Toronto
Independently owned & operated

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

பணமுதலீடுகள் அதிலும் பங்குச் சந்தை முதலீடுகள் எனும் போது 2008இல் பலருக்கும் நினைவுக்கு வருவது வேதனையும் வருத்தமும் தான். சந்தையில் முதலீடு செய்த எல்லோரிடமும் சொல்வதற்கு ஒரு சோகக் கதை உள்ளது. இந்த நிலை எவ்வளவு காலத்துக்கு தொடரும்? துல்லியமாக யாராலும் விடை சொல்ல முடியாது. அதுதான் உண்மை. தனிப்பட்ட பங்குகளை விட மியூச்சுவல் பண்டில் பணம் போடும் போது வலியும், வேதனையும் குறைவாகவே இருக்க வேண்டும் என்பது பொதிவிதி. 2008இல் 30 பெரிய மியூச்சுவல் பண்டுகளின் தன்மை கனடாவில் எப்படி இருந்தது என்று பார்ப்போம். நஷ்டம் அடையாத மியூச்சுவல் பண்ட் ஒன்றுமே இல்லை. Sprott Canadian Equity, TD Canadian Equity போன்றவற்றின் இழப்பு 4.5சதவீதம் குறைந்த பட்ச இழப்பே 18.4 சதவீதம். அது Mackenzie Ivy Canadian Fund ஆகும். நட்டம் என்று வரும்போது பலரும் தனக்கு வந்த நட்டம் மற்றவர்களை விடக் குறைவா? கூடவா? என்று பார்ப்பதில்லை. அடிமனத்தில் கோபமும் வருத்தமும் வரத்தான் காண்கின்றோம்.

பலரும் நட்டத்தை விரும்பியோ, விரும்பாமலோ, கைக்கொண்டிருக்கின்றனர். ஒன்றை விற்கும்போது வரும் நட்டத்தைத்தான் ரிவென்யு கனடா அங்கீகரிக்கின்றது. Capital Loss வந்தால் அதை அந்த வருட Capital Gain உடனோ, அல்லது முந்தைய மூன்று ஆண்டுகளின் Capital Gain உடனோ அல்லது எதிர்காலத்தில் வரும் காலவரையறையின்றி எப்போது வேண்டுமானாலும் Capital Gain உடனோ சரி செய்து கொண்டு வருமான வரி கட்டுவதை மிச்சப்படுத்திக் கொள்ளலாம். விற்ற அதே பங்குகளையோ, மியூச்சுவல் பண்டுகளையோ, 30 தினங்களுக்குள் திரும்பவும் தன் பெயரிலோ, துணைவி அல்லது துணைவரின் பெயரிலோ திரும்ப வாங்கியிருக்கக் கூடாது. வரிச் சலுகையை Capital Loss இல் பெற 30 நாள் விதியைக் கட்டாயம் கடைப்பிடித்திருக்க வேண்டும்.



## பெரி. முத்துராமன்

2009 இல் நீங்கள் வரியை மிச்சம் பிடிக்க அல்லது குறைக்க பத்து யோசனைகளைக் கூறுவோம்

1. குடும்பத்தில் உள்ள 18வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரின் பேரிலும் TFSA என்று சொல்லப்படும் வரிஇல்லா சேமிப்புக் கணக்கைத் திறவுங்கள்.

2. 2009 இல் RRSP யின் அளவு வருமானத்தில் 18சதவீதம் அல்லது அதிகபட்சம் 21,000 டொலர்கள். இப்போதே எப்படி சேமிப்பது என்று திட்டமிடுங்கள். மாதந்தோறும் சேமிக்கலாம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

3. உங்கள் கணவர் அல்லது மனைவிக்கு வருமானம் உங்களை விடக் குறைவாக இருந்தால் Spousal RRSP இல் குறைந்த வருமானம் உள்ள துணையின் பெயரில் சேமிப்பது குடும்பத்துக்கு இலாபகரமானது.

4. வாழ்வில் எதுவும் நிரந்தரமில்லை. பங்குச் சந்தைப் பங்குகள் மீண்டும் உயரும் என்று நம்பினால் RRSP, TFSA இவற்றுக்கு வெளியே முதலீடு செய்யும் பணத்தை பங்குச் சந்தையைச் சார்ந்துள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மியூச்சுவல் பண்டுகளில் முதலீடு செய்யுங்கள். இத்தகைய முதலீடு Dividend Tax Credit, Capital Gain போன்றவற்றைப் பெற்றுத் தந்து வரிகளைக் குறைக்கும்.

5. குழந்தைகளுக்கான RESP இல் பணம் போடத் தவறாதீர்கள். ஆண்டுதோறும் நீங்கள் செலுத்தும் ஒவ்வொரு 2500 டொலர்களுக்கும் அரசாங்கம் 500 டொலர்களைத் தருகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். சென்ற வருடங்களில் RESP க்குப் பணம் செலுத்தாமல் இருந்திருந்தால் அவற்றையும் தற்சமயம் செலுத்தி இணையான அரசாங்க மான்யத்தையும் பெற முடியும்.

6. நீங்கள் ஓய்வூதியம் அல்லது பென்சன் பெறுபவராயிருந்தால் அதை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ளல் (Pension Splitting) இலாபரமானதா என்று தெரிந்து கொண்டு செயல்படுங்கள்.

7. உங்கள் துணைக்கு வருமானம் குறைய இருந்தால் உங்கள் துணைக்கு நீங்கள் கடன் கொடுத்து வட்டி 2சதவீதம் மட்டுமே அவர்கள் பேரில் சொத்துக்களை வாங்கலாம். இதை Income Splitting என்பார்கள். உங்கள் கணக்காளர் மற்றும் வரி தயாரிப்பவருடன் இதைப்பற்றி விவாதியுங்கள்.

8. நீங்கள் தானம் செய்ய விரும்பினால், பங்குகளை (Shares) தானமாகச் கொடுத்து அதனோடு சம்பந்தப்பட்ட Capital Gains யும் இல்லாமல் செய்து கொள்ளலாம்.

9. நீங்கள் வருடா வருடம் Tax Refund பெற்றால் அடிப்படையிலேயே வரிப் பிடித்தலைக் குறைத்துக் கொள்ள CRA க்கு படிவம் T1213 விண்ணப்பிக்கலாம். இத்தகைய விண்ணப்பம் ஒவ்வொரு ஆண்டும் செய்யப்பட வேண்டும்.

10. உங்கள் குடும்பத்தில் நீங்களோ, மற்றவர்களோ உடல் ஊனம் அடைந்திருந்தால், அதற்கான வரிச் சலுகைகளைப் பெற தக்க முயற்சிகளை எடுங்கள். அரசிடமிருந்தும் மான்யம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. RDSP என்றழைக்கப்படும் Registered Disability Savings Plan இல் சேமித்து வரிச் சலுகைகளையும், மான்யத்தையும் பெறலாம்.



இங்கு குறிப்பிடப்பட்டிருப்பவை எல்லாம் மேல் எழுந்த வாரியான தகவல்கள். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தக்கோரிடம் அறிவுரை பெற்று செயல்படுங்கள். பயன் அடையுங்கள்.

# கனேடிய ஊடகங்களும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்திகளில் குறிப்புக்கள் எழுதியவர்கள் மிகக்குறைவே. அதிலும் பாதிப்பேர்கள் தமிழர்களுக்கு எதிராக குறிப்புக்கள் எழுதியவர்கள் ஆகும்.

ஜனவரி 27,2009 ஆம் நாள் வந்த **Toront Star** இணையத்தள செய்தி ஒன்றை பார்ப்போம். “150,000 **Civilians in danger, UN says” comments (5)**
இந்த இலங்கையைப் பற்றிய செய்திக்கு 24 மணித்தியாலங்களிற்கு பின்பு பார்க்கும் போது ஆக 5பேரே குறிப்புக்கள் எழுதியுள்ளார்கள். இச் செய்தி வரும் போது முன்னணியில் இருந்தது, சில மணித்தியாலத்தில் கடைசிச் செய்தியாகி விட்டது. இதே இணையத்தள பேப்பரில் வந்த “**Gaza Bomb Threatens Truce**” செய்தி ஒரு மணித்தியாலத்தில் 72 குறிப்புக்களைப் பெற்றது மட்டுமல்லாமல் தொடர்ந்து பலமணித்தியாலங்கள் முன்னணி செய்தியாக இருந்தது. கனடா வாழ் ஆங்கிலம் நன்கு எழுத பேச தெரிந்த தமிழ்மக்கள் இக் கனேடிய ஊடகங்களுக்கு தமது எண்ணங்களை குறிப்புக்களாக உடனடியாக தெரிவிக்க வேண்டும். இங்கு கூறும் குறிப்பு **Feed back** மின் அஞ்சல் அல்ல. இது ஒரு செய்திக்கு பிரத்தியேகமாக அனுப்பும் குறிப்பு ஆகும். தயவு செய்து செய்திகளுக்கு குறிப்பு எழுதும் போது ஆத்திர வசனங்களோ, அல்லது பாவனைக்கு உபயோகிக்க கூடாத சொற்களையோ எழுதவேண்டாம். இச் செய்திகளையும் உங்கள் குறிப்புக்களையும் பல இலட்சம் மக்கள் இம் முன்னணி நிறுவனத்தின் இணையதளத்தில் பார்க்கிறார்கள். இது இவ்வாறு குறிப்புக்கள் எழுதும் மக்களின் நாடுகளின் பெயரில் இருந்தே அறியலாம். இம் முன்னணி நிறுவனங்களுக்கு பலர் ஐரோப்பா, ஆசியா, அவுஸ்திரேலியாவில் இருந்தும் குறிப்புக்கள் அனுப்புகிறார்கள். இச் செய்தி ஊடகங்கள் எழுதுபவரின் குறிப்புக்களை பிரசுரிப்பதற்கு உகந்ததா என பார்த்தே வெளியிட்டாலும் அவர்கள் எழுதும் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகளை திருத்தமாட்டார்கள் என்பதையும் எழுதுபவர்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவும்.




VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**
For All your Real Estate & Investments Needs!
**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
**HomeLife GTA Realty Inc.** Brokerage *
HOMELIFE HIGHER STANDARDS
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# வரவு செலவுத் திட்டம் - நிதியாண்டு 2009-10

## துண்டுவிழும் தொகை $33.7 பில்லியன் டொலர்

கனேடிய அரசாங்கத்தின் நிதியமைச்சர் ஜிம் பிளர்றி (Jim Flaherty) ஜனவரி மாதம் 27, 2009 நாள் தனது வரவு செலவுத்திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார். அதில் வரும் சில முக்கிய விடயங்களைப் பார்ப்போம்.

1. முதன்முறையாக வீடு வாங்குபவர்கள் தங்களது RRSP சேமிப்பு பணத்திலிருந்து $25 ஆயிரம் டொலர்களை முதலிடுவதற்காக எடுக்கலாம். இதை அவர்கள் 15 வருடகாலத்தினுள் திரும்பி தங்களது RRSP யில் வைப்பிலிட்டால் அவர்கள் $25ஆயிரம் டொலரை எடுக்கும் போது வட்டிகட்டத் தேவையில்லை.

2. ஒருவருக்கான வருமானவரி விலக்கீட்டு தொகை $9,600 இலிருந்து $10,320 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

3. ஒருவருக்கான மிகக்குறைந்த வருமான வரியான 15% அறவிடப்படும் வருமான எல்லை $37,885 இல் இருந்து $40,726 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

4. ஒருவருக்கான வருமானவரியாக 22% அறவிடப்படும் வருமான எல்லை $81,452 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

5. சிறுவியாபார நிறுவனங்களுக்கான குறைந்த வருமான வரியான 11% அறவிடப்படும் வருமான எல்லை $400,000 இல் இருந்து $500,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

6. வேலையற்றோர் பெறும் காப்புறுதிப்பணம் மேலும் 5 கிழமைகளால் நீடிக்கப்பட்டுள்ளது. வேலையை இழந்தோர் தற்போது 50 வாரங்களுக்கு இக்காப்புறுதிப் பணத்தைப் பெறலாம்.

7. முதல் தரம் வீடுவாங்குபவர்க்கு $750 டொலர்கள் வருமான வரிவிலக்காக வழங்கப்படும். வீட்டை திருத்துபவர்க்கு $1,350 டொலர்கள் வரை வருமான வரிவிலக்காக வழங்கப்படும். இவ்வீட்டை திருத்துவதற்கான வரிவிலக்கு பணத்தை பெறுவதற்கு வீட்டு சொந்தக்காரர்கள் குறைந்தது $1000 டொலர்களிலிருந்து $10,000 டொலர் வரையிலான திருத்த வேலைகளை தமது வீட்டிற்கு செய்யவேண்டும். இத்திருத்த வேலைகள் ஜனவரி27, 2009 ஆம் திகதியிலிருந்து பெப்பிரவரி01, 2010 இற்குள் நடைபெறவேண்டும்.

8. வயது முதிர்ந்தோருக்கான வருமான வரிவிலக்கு அளிக்கப்படும் தொகை $1,000 டொலரால் $6,408 ற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

9. கட்டிடம் மற்றும் பெருந் தெருக்களுக்கான நிர்மாணத்திட்டங்களுக்கு அரசாங்கம் 9 பில்லியன் டொலர்களை முதலிடவுள்ளது.

10. சக்தி விரயங்களை குறைக்க உதவும் பசுமைத்திட்டங்களுக்கு ஒரு பில்லியன் டொலர்களை முதலிட உள்ளது.

11. கனடாவின் பூர்வீக குடிகளின் (First Nation) பாடசாலை மற்றும் குடிநீர் திட்டங்களை அமைப்பதற்கு $515 மில்லியன் டொலர்களை முதலிடவுள்ளது.

12. VIA தொடருந்து தேவையை புனர்நிர்மானம் செய்ய $407 மில்லியன் டொலர்களை செலவிட உள்ளது.

இவ்வாறன செலவுகளால் நிதியாண்டு 2009 - 2010 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் $33.7 பில்லியன் டொலர்களால் துண்டு விழுகிறது. இத்துண்டு விழும் தொகை 2010 - 2011 ஆம் நிதிஆண்டில் $29.8 பில்லியன் டொலர்களாவும், 2011 - 2012 ஆம் நிதி ஆண்டில் $13.0 பில்லியன் டொலர்களாகவும் 2012 -2013 ஆம் நிதி ஆண்டில் $7.5 பில்லியன்களாகவும் தொடரும் என எதிர்பார்க்கபடுகின்றது. நடப்பு நிதியாண்டான 2008 - 2009 இல் $1.1 பில்லியன் டொலர்கள் மேலதி செலவீனம் ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் இனிவரும் ஐந்து வருடங்களில் கனடாவின் வரவு செலவுத்திட்டத்தில் மொத்தமாக $85.1 பில்லியன் டொலர் துண்டு விழும் என கணக்கிடப்பட்டுள்ளது.

நிதியாண்டு 1996 - 1997 இல் இருந்து நடப்பு நிதியாண்டான 2008 2009 வரை கனடிய வரவு செலவுத்திட்டத்தை நிதியமைச்சர்கள் மேலதிக வரவு காட்டியே சமர்ப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரணபயத்தில் சிக்கித்தவிக்கும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

விடுதலைப்புலிகளையும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, போர் முனையில் காயமடைந்த 300 பொதுமக்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாமல் ஐ.நா.சபை ஊழியர்கள் தவித்து வந்தனர். இராணுவம் தாக்கக்கூடும் என்றும் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது என்றும் விடுதலைப்புலிகள் கூறியதால் செய்வது அறியாது திகைத்து நின்றனர்.

இது தொடர்பாக ஐ.நா. சபைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதால் 300 அப்பாவி தமிழர்களும் ஐ.நா. சபை வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டனர். போர் நடைபெறும் எல்லையை வியாழக்கிழமை நண்பகலில் அந்த வாகனங்கள் கடந்தன. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வன்னியில் குறுகிய நிலப்பகுதியில் தொடர்ந்து கடும் சமர் நடைபெற்று வருகையில் அங்கு பெரும் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது" என்று ஜெனீவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆசிய பிராந்திய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஜேக் மே டயோ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்

விடுதலைப்புலிகளின் இறுதிப் பிரதேசமாகிய ஒரு சிறிய நிலப்பரப்பு மீது இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை காரணமாக நூற்றுக்கணக்கில் இறந்தவர்களினாலும் பெரும் எண்ணிக்கையில் காயமடைந்தவர்களினாலும் வன்னிப் பிரதேசத்தின் வைத்திய நிலையங்கள் யாவும் நிறைந்து வழிகின்றன.

இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே வன்னியில் மூண்டுள்ள கடும் சண்டைகளையடுத்து நுற்றுக்கணக்கானவர்கள் இறந்துள்ளார்கள். வசதிகள் குறைந்த ஆளணி பற்றாக்குறையுள்ள வைத்திய நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் காயமடைந்தவர்களினால் நிறைந்து வழிகின்றன.

மக்கள் மோதல்களில் சிக்கியிருக்கிறார்கள். வைத்திய சாலைகளும் அம்புலன்ஸ்களும் தாக்குதல்களுக்கு இலக்காகியிருக்கின்றன. காயமடைந்த சிவிலியன்களை மீட்க முயன்ற உதவிப் பணியாளர்கள் பலரும் காயமடைந்திருக்கிறார்கள். சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரின் பணிகள் அங்கு நிலவுகின்ற வன்முறைச் சூழலினால் தடைப்பட்டிருக்கின்றன.



பெரும் அச்சத்திற்குள்ளாகியுள்ள பொதுமக்களுக்குப் பாதுகாப்பு, வைத்திய கவனிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தேவையாகவுள்ளது. பெரும் மோதல்கள் இடம்பெறுகின்ற 250 சதுர கிலோ மீற்றர் பரப்பளவான இடத்தில் இரண்டரை இலட்சம் பேர் சிக்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒதுங்கியிருப்பதற்குப் பாதுகாப்பான இடமில்லை. அங்கிருந்து தப்பியோடவும் முடியாதவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மதிக்கப்பட்டு சிவிலியன்கள் பாதுகாக்கப்படாவிட்டால் எல்லாம் ஓயும் போது எண்ணற்றவர்கள் பாதிக்கப்பட்டு மோசமான ஒரு மனிதாபிமான நிலைமை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. நேரம் ஓடிக் கொண்டிருக்கின்றது. மேலும் இரத்தம்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998


435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# தெய்வீகத்தேர்வு

## ஆட்சி செய்வதா? தொண்டு செய்வதா?



சத்குரு ஜக்கி வாசுதேவ்

பொதுவாகவே எல்லோருக்கும் உலகத்தை ஆளத்தான் ஆசை. ஒருவர் தனக்கு வேண்டியதை உருவாக்கிக் கொள்வது என்றால் அதனைக் கற்பனை செய்வது, காட்சிப்படுத்திப் பார்ப்பது, கனவு காண்பது, அதற்காக ஏங்குவது, தவிப்பது, பிரார்த்திப்பது, கெஞ்சுவது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் எந்த ஒன்றையும் கேட்காமல், அது குறித்து சிந்திக்கக்கூட செய்யாமல் ஒன்று தானாக உருவாவதற்கான வழி இருக்கிறது. அந்த நிலையை எட்டுவதற்கு முன்பு தீப்பற்றியது போன்ற தீவிரம் உங்களுக்கு தேவைப்படுகிறது. நெருப்பின் தன்மையை உணராதவர்களால் நீரின் குளுமையையும் உணரமுடியாது. அரைகுறையாக வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் இன்னொரு வழி இருப்பதை எண்ணி பார்க்கவே முடியாது. வெறித்தனமான தீவிரத்தோடு இருப்பதென்பது, குறிப்பிட்ட எல்லை வரை உங்கள் சக்திநிலை கொதிநிலை அடைந்து நகர்வதற்கு வழி செய்யும். அதன்பிறகு அந்த சக்தியை வேறொன்றாக மாற்றுவது மிக எளிது. கர்மவினை அல்லது செயலின் முழு நோக்கமே இதுதான்.


தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org


ஓர் ஆத்ம சாதகர், செயல்படுவதைத் தேர்ந்தெடுப்பது இதற்காகத்தான். எப்படியும் செயல் செய்யத்தான் போகிறீர்கள். ஹிட்லரைப்போல செயல்படப்போகிறீர்களா, மகாத்மா காந்தியைப்போல் செயல்படப் போகிறீர்களா? என்று தேர்வு செய்யக்கூடிய உரிமை உங்களுக்கு இருக்கிறது. இப்போதைக்கு எதை சிறந்தது என்று எண்ணுகிறீர்களோ அதைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். எப்படியும் செய்யவேண்டி இருப்பதால் அதை முழுமனதோடு செய்யுங்கள். எந்தவிதத்தில் செயல்படவேண்டும் என்று நீங்கள் தேர்ந்தெடுங்கள்.

உங்களுக்கு நீங்கள் கட்டமைக்க விரும்புகிற சுயபிம்பம் என்னவென்று தெரியுமா? உங்களுக்கு உலகை ஆட்சி செய்ய விருப்பமா அல்லது தொண்டு செய்ய விருப்பமா? மொத்தத்தில் இதைத் தேர்வுசெய்கிற உரிமை உங்களுக்கு இருக்கிறது. இயல்பாகவே எல்லா மனிதர்களுக்கும் உலகை ஆளவேண்டும் என்று தான் ஆசை. அதில் அவர் அரை மனதோடு இருக்கிற காரணத்தால் தன் மனைவியின் மேல் மட்டும் ஆதிக்கம் செலுத்கிறார். முழு உலகை ஆளமுடியாத மனிதர்கள் தங்கள் மனவியையும் குழந்தைகளையும் ஆள முற்படுகிறார்கள். ஆனால் அவருடய ஆசை என்னவோ உலகம் முழுவதையும் ஆள்வதுதான். இந்த முட்டாளுக்கு அதற்கான தகுதியோ தீவிரமோ இல்லை. இருந்திருந்தால் அவர் இன்னொரு ஹிட்லராக இருந்திருப்பார். தன்னுடைய எண்ணத்திற்கு ஒத்துவராததால் மனைவியையோ, குழந்தைகளையோ அடித்து உதைக்கிற மனிதர், நாளை உலகுக்கு அரசரானால் குச்சிக்குப் பதிலாக ஒரு வாளைப் பயன்படுத்துவார். அந்தத் தீவிரமும், தகுதியும் இல்லையே தவிர இப்போதே அவர் ஒரு கொடுங்கோலர்தான்.

ஆட்சி செய்வதா? தொண்டு செய்வதா? இப்போ நீங்கள் தேர்ந்தெடுக்கவேண்டியது இதுதான். எது மிகவும் இணக்கமானது, தெய்வீகத்க்கும் தன்னை உணர்தலுக்கும் நெருக்கமானது என்று கருகிறீர்களோ அதை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். ஒவ்வொரு விநாடியும் முழுத்தீவிரத்தோடு, விநாடி நேரம் கூட அதிலிருந்து விலகாமல் செயல்பட வேண்டும். அதன்பிறகு செயலே தேவையில்லாத ஒரு நிலை ஏற்படும். உண்மையான செயல்திறனை, தீவிரமான செயல்திறனை அறியாத மனிதன், செயல் கடந்த நிலைக்குச் செல்லவே முடியாது. செயல் கடந்த நிலை இவர்களைப் பொறுத்தவரையில் சோம்பலாகத்தான் இருக்கும். வாழ்க்கை முழுவம் ஓய்விலேயே இருப்பவர்கள், ஓய்வெடுப்பதிலே நிபுணர்களாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் உண்மை அப்படி இல்லை. மிகத் தீவிரமாக செயல்படுகிற மனிதனுக்குத்தான் ஓய்வு என்றால் என்ன, செயல் கடந்த நிலை என்றால் என்ன என்று தெரியும். செயல் கடந்த நிலை என்ன என்று உங்களுக்குத் தெரியவேண்டுமென்றால், தீவிரமான செயல் என்ன என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதை நீங்கள் இன்னும் செய்யவில்லை. என்னைப் பொறுத்தவரையில் என் வாழ்வில் விழித்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் உடலளவிலும், மனதளவிலும் முழுமையான பணிக்கு நான் என்னை அர்ப்பணிக்கிறேன். நான் விழித்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் ஓய்வில்லாத, இடையறாத பணியில் முழுத்தீவிரத்தோடு நான் ஈடுபடுகிறேன். அதனால் தான் என்னைச் சுற்றி இத்தனை விஷயங்கள் என் வாழ்வில் நடந்திருக்கின்றன. 24மணிநேரமும் இடையறாமல் இயங்குகிறபோது, அது ஒரு புதுவிதமான சக்தியாக வடிவெடுக்கிறது. தியாகம் என்பதன் முழுப் பொருள் இதான். அதன் விளைவாகத் தான் உள்நிலையிலும், புறநிலையிலும் ஏதோ ஒன்று நிகழ்கிறது. இதனை வார்த்தைகளில் நம்மால் விவரிக்க இயலாது.

# ஆபிரகாம் லிங்கன் வழியில் புதிய அமெரிக்க அதிபர் ஒபாமா

“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கியல்பு”

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும் என்ற வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க இத்தகுதிகளை உடைய பராக் குசைன் ஒபாமா (Barack Hussein Obama) ஆபிரகாம் லிங்கன் பயணித்த பாதையில் தொடருந்தில் வாஷிங்டனுக்கு வந்து ஆபிரகாம் லிங்கன் 1861 இல் சத்தியபிரமாணம் எடுக்க உபயோகித்த பைபிள் புத்தகத்தை கையில் பிடித்தபடி அமெரிக்காவின் 44வது அதிபராக 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி சத்தியபிரமாணம் செய்தார். அமெரிக்க மக்கள் எவ்வளவு தான் விஞ்ஞானத்தில் முன்னின்றாலும் அவர்கள் சமய நம்பிக்கையிலும் அந்தளவுக்கு முன்னேற்றமாகத்தான் இருக்கிறார்கள் என்பது அவர்களது அதிபர் பதவியேற்பு வைபத்தில் துல்லியமாகத் தெரிந்தது. அதிபர் பதவியேற்க முன்னர் அன்று காலை ஒபாமா மனைவியார் மிச்சல் சகிதம் முதலில் சென்றது பழமைவாய்ந்த செயின்ட் ஜான்ஸ் தேவலாயத்திற்கு தான். அங்கு அவர் தனது தனிப்பட்ட பிரார்த்தனையை முடித்துக் கொண்டே அதிபர் பதவி ஏற்கும் இடத்திற்கு சென்றார். அங்கும் நிகழ்ச்சிகள் சிறப்பு பிரார்த்தனையுடனேயே ஆரம்பித்தன. பின்னர் பதவிப் பிரமாணம் எடுக்க பாவித்தது பைபிள் புத்தகம். பதவிப் பிரமாணத்திலும் நாட்டை பாதுகாப்பதற்கு கடவுளின் துணையை வேண்டுகிறார் அதிபர்.

புதிய அமெரிக்க அதிபர் ஒபாமா தனது பதவிப்பிரமாண உரையில் அமெரிக்க நாட்டின் பல்கலாச்சாரம் ஒரு பலமே தவிர பலவீனம் அல்ல என்றார். அமெரிக்கா கிறிஸ்தவர்களையும், முஸ்லீம்களையும், யூதர்களையும், இந்துக்களையும் மற்றும் சமய நம்பிக்கை இல்லாதவர்களையும் கொண்ட ஒரு நாடு. இந்த பூமியிலுள்ள எல்லா நாட்டினதும் கலாச்சாரத்தாலும் உலகிலுள்ள எல்லாமொழி பேசும் மக்களாலும் சேர்ந்தே அமெரிக்கா என்ற தேசம் அமையப்பெற்றுள்ளது என்றார்.

அமெரிக்கா உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டினதும் நண்பன். அமைதியாகவும் மானம் மரியாதையுடனும் (Dignity) வாழ விரும்பும் ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் பிள்ளைகளினதும் நண்பன். அமெரிக்கா மீண்டும் உலக நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியாக (Lead) தலைமை வகிக்கப்போகிறது. ஒருவரை ஒருவர் மதிப்பதன் மூலம் (Mutual Respect) நாம் ஒரு புதிய பாதையை திறந்து முன்னேறுவோம் என்று முஸ்லீம் உலகத்தை நோக்கி சமாதான தூதை ஒபமா விடுத்தார். மற்ற நாடுகளுக்கு எதிராக விரோதத்தை வளர்த்துக் கொண்டு தங்கள் நாட்டில் ஏற்படும் எல்லா பிரச்சினைகளுக்கும் மேற்குலகமே காரணம் எனக் கூறிக் கொண்டு இருக்கும் நாடுகளின் தலைவர்களை நோக்கி ஒபமா கூறினார். உங்கள் நாட்டு மக்கள் நீங்கள் தங்களுக்காக என்ன செய்தீர்கள் என்பதை வைத்துத் தான் உங்களை மதிப்பார்களே ஒழிய நீங்கள் என்னத்தை அழித்தீர்கள் என்பதை வைத்து உங்களை மதிக்கமாட்டார்கள் என்றார்.

இலஞ்சம், ஊழல் போன்றவற்றால் பதவியை தப்பவைத்திருக்கும் அரசாங்கங்களை நோக்கி ஒபமா கூறுகையில் நீங்கள் சரித்திரத்தின் பிழையான பக்கத்தில் நிற்கிறீர்கள். நீங்கள் ஊழல்களை விட்டால் நாங்கள் உதவிக்கரம் நீட்ட தயாராக இருக்கிறோம் என்றார்.

ஏழைநாடுகளை நோக்கி ஒபாமா சொன்னார், உங்களுடன் நாங்கள் ஒத்துழைத்து உங்கள் தோட்டங்களில் பயிர்களை விளைவிக்கவும், உங்கள் நாட்டில் நன்னீர் பாயந்தோட வழி செய்யவும், உங்கள் பசியால் வாடிய உடம்புகளுக்கு உணவு அளிக்கவும் தயாராக இருக்கிறோம். நாங்கள் மட்டும் தேவைக்கு அதிகமானவற்றை அனுபவித்துக்கொண்டு எங்கள் நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் உள்ளவர்களை துன்பப்பட விடமாட்டோம். நாங்கள் மட்டும் தனிய உலகின் பொருளாதார வளங்களை அனுபவித்து கொண்டிருக்கமாட்டோம். உலகம் மாறிவிட்டது. நாங்களும் அத்துடன் சேர்ந்து மாறுவோம். கடவுளின் கருணை எங்களுக்கு கிடைக்கட்டும் (God's Grace Upon us) என்றார்.

தான் பதவிப்பிரமாணம் செய்து 24 மணித்தியாலங்களில் தான் அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் சிலவற்றை நிறைவேற்றினார்.அமெரிக்காவின் புதிய




அதிபர் ஒபாமா. முதலில் அமெரிக்க நாட்டு சட்டவிதிகளுக்கு அமையாமல் சித்திரவதை செய்து வாக்கு மூலங்கள் பெறுவதற்கு வசதியாக அமெரிக்காவிற்கு வெளியில் கடந்த அரசாங்கத்தால் திறந்து வைக்கப்பட்ட குவாந்தனாமோ (Guantanamo Bay) சிறைச்சாலையை ஒரு வருடத்தில் முற்றாக மூடுவதற்கான சட்டமூலத்தில் ஒபாமா கையெழுத்திட்டார். இரண்டாவதாக கடந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட சித்திரவதை செய்து வாக்குமூலம் செய்யக்கூடிய இராணுவ அமைப்பை தடைசெய்தார்.

மூன்றாவதாக குற்றவாளிகளை தடுப்புக்காவலில் வைத்திருத்தல் சம்பந்தமான விதிமுறைகளை ஆராய்வதற்கான சட்டமூலத்திலும் கையெழுத்திட்டார் (Executive Order)

# பேரண்டக் கதை

நத்தார், புதுவருட, தைப்பொங்கல் என அடுத்தடுத்து பல கொண்டாட்ட நாட்களைக் கடந்து வந்துள்ளோம், அல்லவா! ஒவ்வொரு வருடமும் இவை எமது புத்துணர்ச்சியிற்காக வருபவதைதானே. கொண்டாடுவதும், விட்டுவிடுவதும் வெவ்வேறு விடயங்கள். ஆனாலும் அவை மிகவும் அவசியமானவை என்றே தோன்றுகின்றன.



## பிரபஞ்சம் - 32

சென்ற தடவை கெப்பினரின் பொதுமைப்பட்ட கதையைப் பார்த்தோம். இனி அவரின் வானியல் தொடர்பான விடயங்களைப் பார்ப்போம். பல்கலைக்கழகத்தில் படிக்கையில் கெப்பினர் தொலமியினதும், கொப்பநிக்கசினதும் பேரண்ட மாதிரிகளைப் பற்றிப் படிக்கக் கூடியதாக இருந்தது. விரிவுரையாளர்கள் பலரும் தொலமியின் பேரண்ட மாதிரியை முதன்மைப்படுத்தியே கற்பித்த போதிலும் கெப்பினருக்கோ கொப்பநிக்கசின் பேரண்ட அனுமானமே சரியானது போலத் தெரிய, அவ்வடிவினையே கெப்பினர் சரியானது எனக் கொண்டு, தமது ஆய்வுகளையும், சிந்தனை-களையும் அவ்வழியிலேயே நகர்த்திக் கொண்டார். இருப்பினும் இரண்டு மாதிரிகளிலும் கோள்களின் நிலைகளுக்கான துல்லியம் கால ஓட்டத்துடன் இல்லாமல் இருப்பதை அவர் கண்டு கொண்டார். ரைக்கோவும் இதனைப் பற்றிக் கூறியதை நீங்கள் அறிவீர்கள் தானே. இளம் விஞ்ஞானியான கெப்பினரின் மூளையின் முதலில் உதித்த எண்ணம் என்னவெனில், பேரண்டச் சுழற்சியில் அமைந்திருந்த கோள ஓடுகள் தான், இக்கோள்கள் எல்லாம் கோள ஓடுகளுடன் இணைந்திருக்கவில்லை. மாறாக வேறு ஒரு சரியான அமைப்பில் இருக்க வேண்டும் என எண்ணிய கெப்பினர், ஆறு கோள ஓடுகளைக் கொண்ட பேரண்ட மாதிரியில் புதிய திருத்தம் ஒன்றினைக் கொண்டுவந்தார். அதன்படி கோளத்தினுள் அமைந்திருக்க கூடியதான வேறு சில ஒழுங்கான கேத்திரகணித வடிவ அமைப்புகளின் உச்சியில் இந்த ஆறு கோள்களும் இருக்க, பேரண்டப் பொறியின் அசைவின் வழியே, அந்த வடிவங்கள் அசைய, கோள்கள் வான்வெளியில் காலத்திற்குக் காலம் வெவ்வேறு இடங்களை வந்தடைகின்றன என புதியதான ஒரு விளக்கத்தினை கெப்பினர் கொண்டு வந்தார். அந்த ஒழுங்கான திண்மவடிவங்கள் ஆவன முக்கோண முகங்களைக் கொண்ட எண்முகி (எட்டுமுகம்), முக்கோண முகங்களைக் கொண்ட பன்னிருமுகி, இருபது முகங்கள் ஒவ்வொன்றும் முக்கோணமானவை, முக்கோண முகங்களை உடைய நான்முகி, மற்றையது சதுரமுகங்களையுடையது அறுமுகி என்பவையே.

புதன்கிரகத்திற்கு தவிர ஏனைய கிரகங்களுக்கு இந்த ஒழுங்கமைப்பு பொருத்துவதாக இருந்தாலும், இது பூரணமானது இல்லை எனக் கெப்பினர் அறிந்து இதனைக் கைவிட்டு விட்டார். ஆனாலும் கெப்பினரின் மூளையின் திறமையையும், கணிதத் திறமையையும், பலதரவுகளை ஒன்றிணைக்கும் திறமையையும் இந்த அமைப்பு எடுத்து காட்டுகிறது என்பேன். பிந்நாளில் அயன்ஸ்ரைனிடமும் இத்திறமை இருந்ததையும் அதனூடாக அவர் எவ்வளவு பெரிய கண்டுபிடிப்புகளை உலகிற்குத் தந்தார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். என்மட்டில் கெப்பினர் கூட அயன்ஸ்ரையின் திறமையைச் சற்றேறக் குறைய கொண்டவர் என்பேன். இன்றும் கெப்பினரை நினைவு கூறும் வெளியீடுகளில், கெப்பினரின் இந்த பேரண்டத்திற்கான ஒழுங்கான திண்ம பேரண்ட வெளிமாதிரியானது காட்டப்படுவதை நீங்கள் காணலாம். நான் முன்னரே கூறியிருந்தேன், கெப்பினரின் காலத்தில் வானவியலும், சோதிடமும் பிரிக்கமுடியாமல் ஒன்றாக இருந்தனவென்று. மறுதலையாக பௌதீகமும் வானவியலும் வேறு வேறாகவே பார்க்கப்பட்டன. முதன்முதலில் பௌதீகத்தை வானியலினுள் புகுத்தி, வான்பொருட்களின் இயக்கங்களின் மர்மத்தினை தெளிவுபடுத்த முயன்றவர், தெளிவுபடுத்தியவர் கெப்பினர் தான்.

வான்பொருட்களின் இயக்கங்களுக்கு இயக்கவியல் முறையில் தீர்வினை முன்வைத்தார் கெப்பினர். இதற்கு ரைக்கோவினது குறிப்புகள் பெரிதும் உதவின கெப்பினருக்கு.

ரைக்கோவினது குறிப்புகளின்படி, செவ்வாயின் நிலைகளை தொடர்புபடுத்திப் பார்த்த கெப்பினருக்கு ஆச்சரியமாக இருந்தது. செவ்வாயின் சூரியனைச் சுற்றும் பாதையானது வட்டவடிவமாக இருக்கவில்லை. இது போலவே ஏனைய கோள்களின் இயக்கப்பாதைகளும் வட்டவடிவமாக இருக்கவில்லை என்பதைக் கண்டுகொண்டார். பூமியை வலம்வரும் சந்திரனின் பாதை மட்டுமே ஓரளவுக்கு வட்டமாக இருப்பதை அவதானித்தார். சூரியனைச் சுற்றிவரும் கோள்களின் பாதை வட்டப்பாதையாக இல்லாமல் இருந்தால் அவை எவ்விதம் வலம் வலம் வருகின்றன எனக் கேட்கலாம். அவை நீள்வளையப் பாதையில் வருவதை கெப்பினர் உலகிற்குத் தெரிவித்தார். கோள்கள் எல்லாம் நீள்வளையப்பாதையில் சூரியனை வலம்வர, அந்த நீள்வளையத்தின் ஒரு குவியத்தில் சூரியன் இருப்பதையும் கண்டு கொண்டார். பல நாளின் அவதானிப்பின் வழியே, கோள்களின் இயக்கங்களுக்கான விதிகளைக் கண்டு பிடித்து, உலகிற்கு தந்தார்.

அடுத்த தடவையில் கோள்களின் இயக்கங்களுக்கான கெப்பினரின் விதிகளைப் பற்றிப் பார்ப்போம்.

**- கனி -**




## SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

• A-Z & D-Z up grade • One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
• வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan

**416.913.9574/416.829.0603**

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



## New Home Warranty Inspections

## Pre-purchase Home Inspections

*Nalliah Thayabharan BSSO CMI CEI RHI*

Building Science Specialist of Ontario®

Certified Master Inspector®

Registered Home Inspector®

*Building Experts Canada Ltd*

*416 332 1743 / www.buildingexperts.ca*



## Commercial Building Inspections

**Environmental Assessments** Phase I, II & III

Specializing in Commercial Malls, Motels & Gas Stations

*Building Experts Canada Ltd*

*Tel.416 332 1743 / Fax 416 754 7032*

*www.buildingexperts.ca*

# கங்காருவின் இறங்குமுகம்

## விளையாட்டுத் தகவல்கள் 254

அடிலெய்டில் திங்கட்கிழமை நடைபெற்ற 4வது ஒருதின கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியாவை 8விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்து, 5 போட்டிகள் தொடரை 3 - 1 என்ற கணக்கில் வென்றது தென்ஆபிரிக்கா என்றாலும் அவுஸ்திரேலியாவே சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் ஒருதின போட்டித் தரவரிசையில் முதலிடத்தில் நீடிக்கிறது. 123 புள்ளிகளுடன் 3 புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் இடத்தில் உள்ளது தென்ஆபிரிக்கா அடிலெய்டில் பகலிரவாக நடைபெற்ற 4வது ஒருதின கிரிக்கெட் போட்டியில் முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி 48 ஓவர்களில் 222 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தது. மகாயா நிதினியும், டேல் ஸ்டெய்னும் அபாரமாகப் பந்துவீசி முதல்வரிசை வீரர்களை மட்டுப்படுத்தினர். இருவரும் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலியா தரப்பில் அணித்தலைவர் ரிக்கி பாண்டிங் அதிகபட்சமாக 63 ரன்களையும், ஜேம்ஸ் ஹோப்ஸ் 42 ஓட்டங்களையும் குவித்தனர்.

அடுத்து ஆடிய தென்ஆபிரிக்கா அணி 38.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து இழக்கை எட்டி எளிதாக வெற்றி பெற்றது. ஹசிம் அம்லா 80 ஓட்டங்களையும், டி வில்லியர்ஸ் 82 ஓட்டங்களையும் சேர்த்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

டி வில்லியர்ஸ் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார். முத்தரப்பு கிரிக்கெட் தொடரை இலங்கை கைப்பற்றியது.

டாக்காவில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பரபரப்பான இறுதி ஆட்டத்தில் வங்கதேசத்தை 2 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்து இலங்கை.

முதலில் ஆடிய வங்கதேச அணி 49.4 ஓவர்களில் 152 ஓட்டங்களைச் சேர்த்தது.

வலுவான இலங்கை அணி எளிதான இலக்குடன் அடுத்து ஆடியது. ஆனால் 6 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து நிலைகுலைந்தது. இதனால் வெற்றி வாய்ப்பு அரிதாகிப்போன நிலையில் குமார் சங்கக்கரா, முத்தையா முரளிதரன் ஆட்டம் வெற்றிக்கு வித்திட்டது.

11பந்துகள் மீதமிருக்கையில் 8விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டி வெற்றி கண்டது அணி.

சங்கக்கரா 133 பந்துகளில் 59 ஓட்டங்களைச் சேர்த்தார். அதே சமயம் பந்துவீச்சாளர் முதளிதரன், இக்கட்டான நிலையில் 16 பந்துகளில் 33ஓட்டங்களைக் குவித்து சிறப்பு சேர்த்தார். 4 பவுண்டரிகளும், 2சிக்சர்களும் அவர் விளாசினார். மஹரூப் 38 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**நாயகன் சங்கக்கரா** - ஆட்டநாயகனாக சங்கக்காராவும், தொடர் நாயகனாக வங்கதேசத்தின் சாஹிப் அல் ஹாசனும் விருது பெற்றனர்.

ரஞ்சி கோப்பையை 38வது முறையாக கைப்பற்றி சாதனை படைத்து சச்சின் டெண்டுல்கா உள்ளிட்ட நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய மும்பை அணி.

ஹதராபாதில் நடைபெற்றுவந்த இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் உத்தரப்பிரதேச அணியை 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது மும்பை அணி. வெள்ளிக்கிழமை போட்டியின் கடைசி மற்றும் 5ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது.

525 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த உத்தரப்பிரதேச அணி 71.5 ஓவர்களில் 281 ஓட்டங்களைச் சேர்த்து சுருண்டது.

**குல்கர்னி அபாரம்** - மும்பை வீரர் தவால் குல்கர்னி சிறப்பாகப் பந்துவீசி 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இவரது வீச்சால் உத்தரப்பிரதேச அணி நிலைகுலைந்தது. கடைசியாக குப்தாவை ஆட்டமிழக்கச் செய்து போட்டியை முடிவுக்குக் கொண்டுவந்தார் குல்கர்னி. அமீர் கான், பிரவீண் குப்தா ஜோடி கடைசி விக்கெட்டுக்கு 55 ஓட்டங்களைச் குவித்து மும்பையின் வெற்றியை தாமதப்படுத்தியது. அவர்கள் முறையே 43, 25 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த ரெஸ்ற் வீரர்கள் பட்டியலில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 26வது இடத்தைப் பிடித்துள்ளார். இப்பட்டியலில் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட்மன் முதலிடம் பிடித்துள்ளார்.
இப்பட்டியலில் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் (916 புள்ளி) 20வது இடம் பிடித்துள்ளார்.

அதிக ஓட்டம் குவித்தவர்களான பிரையன் லாரா, ஆலன், பார்டர், ஸ்டீவ் ஹாவ் போர்றோரது பெயர்களும் இதில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

41சதங்களுடன் 12,429 ஓட்டங்கள் குவித்துள்ள சச்சின் முன்னிலை வீரர்களில் இடம்பிடிக்காதது ரசிகர்களுக்கு ஆச்சரியம் அளித்துள்ளது. சிறந்த ஒரு தின வீரர்கள் பட்டியலில் சச்சின் (887 புள்ளி) 12வது இடம் பிடித்துள்ளார்.

பல்வேறு வகைகளில் கணக்கிடப்பட்டுள்ள இப்பட்டியல் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு வீரர் எவ்வளவு உயர்வை அடைந்தார் என்பதை காட்டுகிறது. வீரர்களின் உண்மையான உயர்வை பிரதிபலிக்கவில்லை என சர்வதேச கிரக்கெட் கவுன்சில் விளக்கம் அளித்துள்ளது.

**பாகிஸ்தான் அணித்தலைவராக யூனிஸ் காஸ் நியமனம் - ஷோயப் மாலிக் நீக்கம்**

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அணித்தலைவராக யூனிஸ் கான் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அணித்தலைவராக இருந்த ஷோயப் மாலிக் நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கையிடம் பெற்ற தோல்விக்கு பொறுப்பேற்று, ஷோயப் மாலிக் தானே விலக விருப்பம் தெரிவித்தார். அதையடுத்து அணித்தலைவராக யூனிஸ் கான் நியமிக்கப்பட்டார் என கிரிக்கெட் வாரியத் தலைவர் இஜாஸ் பட் செவ்வாய்கிழமை கூறினார். துணை அணித்தலைவராக மிஸ்பா உல் ஹக் நீடிப்பார் என்றார்.

2006 இல் யூனிஸ் கான் அணித்தலைவராக இருந்த போது இந்தியாவில் நடைபெற்ற சாம்பியன்ஸ் டிராபி போட்டியில் பாகிஸ்தான் முதல் சுற்றையே தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2007 உலகக் கோப்பையில் பாகிஸ்தான் படுதோல்வியடைந்த பிறகு, அதன் பின்னர் அணித்தலைவராகும் வாய்ப்பை யூனிஸ் கான் மறுத்தார்.

**வெற்றி முனைப்பில் இந்தியா - இலங்கையுடன் மோதல்**

இந்திய, இலங்கை அணிகளுக்கு இடையேயான முதல் ஒரு தின ஆட்டம் தம்புல்லாவில் புதன்கிழமை நடைபெறுகிறது. இந்த ஆட்டம் காலை 10 மணிக்குத் தொடங்குகிறது.
கடந்த ஆண்டு இலங்கையில் சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி 3 - 2 என்ற கணக்கில் இலங்கையை வென்றது. அந்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ளும் முனைப்பில் இந்தியா களம் காணுகிறது.

அதே நேரம், அந்தத் தோல்விக்கு பழி தீர்க்கும் வகையில் இலங்கை முதல் ஆட்டத்தை அணுகியுள்ளது.

**வலுவான நிலையில் இந்திய அணி** - மகேந்திர சிங் தோனி தலைமையிலான இந்திய அணி ரெஸ்ற் மற்றும் ஒரு தின ஆட்டங்களில் வெற்றி மேல் வெற்றி குவித்து வருகிறது.
சமீபத்தில் நடைபெற்ற இங்கிலாந்துடனான ஒரு தினத் தொடரில் இந்தியா 5 - 0 என வெற்றி வாகை சூடியது.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் சேவாக், கம்பீர் ஆகியோர் அபாரமாக விளையாடி வருகின்றனர்.

அதையடுத்து வரும் டெண்டுல்கர், யுவராஜ் சிங், தோனி, சுரேஷ் ரெய்னா, ரோஹித் சர்மா ஆகியோரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஹர்பஜன் இல்லை - இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் ஜாகீர் கான், இஷாந் சர்மா ஆகியோர் அற்புதமான இணையாக உருவெடுத்துள்ளனர்.

இந்நிலையில், காயம் காரணமாக ஹர்பஜன் சிங் விளையாடாதது மட்டுமே இந்திய அணிக்கு ஒரு சிறு பின்னடைவாக உள்ளது.

எனினும் அணியில் இடம்பெற்றுள்ள பிரக்யான் ஓஜா, ரவீந்திர ஜடேஜாவுடன் டெண்டுல்கர், யுவராஜ் சிங், சேவாக் ஆகியோர் ஹர்பஜன் சிங் இல்லாத குறையை நிவர்த்தி செய்வார்கள் என நம்பிக்கை தெரிவிக்கிறார் அணித்தலைவர் தோனி.

**தடுமாறும் இலங்கை** - அதே சமயம் சமீபத்திய ஆட்டங்களில் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை இலங்கை வெளிப்படுத்தவில்லை. வலுகுறைந்த அணிகளாகக் கருதப்படும் ஜிம்பாப்வே வங்கதேசம் ஆகிய நாடுகளுடனான ஆட்டங்களில் இலங்கை தடுமாறியுள்ளது.

ஆனால், ஓரளவுக்கு வலுவான அணியான பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் 2 - 1 என சில தினங்களுக்கு முன் வென்றது இலங்கைக்கு நம்பிக்கையை அளித்துள்ளது. இலங்கை அணியில் ஜயசூரியா, ஜயவர்தனே, சங்கக்கரா ஆகியோர் தவிர மற்றவர்கள் புதுமுக வீரர்கள். இருப்பினும் அவர்கள் பாகிஸ்தானில் சிறப்பாக விளையாடினர்.
**சுழல் ஜாலங்கள்** - எனினும் இலங்கையின் வேகப் பந்துவீச்சாளர்கள் நுவான குலசேகரா, திலினா துஷாரா ஆகியோர் சிறந்த பந்துவீச்சாளர்களாக உருவாகியுள்ளனர். அவர்களுடன் சுழல் மன்னர்கள் முத்தையா முரளிதரன் அஜந்தா மெண்டிஸ் ஆகியோர் அணிக்கு நம்பிக்கை நாயகர்களாக உள்ளனர். வெற்றி பெறும் முனைப்பில் இந்தியாவும், கடந்த முறை பெற்ற தோல்விக்கு பழிதீர்க்கும் முனைப்பில் இலங்கையும் உள்ளதால் இந்த ஆட்டம் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.


**அவுஸ்திரேலிய ஓபன் - அரை இறுதியில் ஃபெடரர், ராடிக், சஃபினா, வோனரெவா**
அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியின் அரை இறுதிக்கு சுவிற்சலாந்தின் ரோஜர் ஃபெடரர், அமெரிக்காவின் ஆன்டி ராடிக், ரஷிய வீராங்கனைகள் தினாரா சஃபினா, வெரா வோனரெவா ஆகியோர் முன்னேறினர். மெல்போர்னில் செவ்வாய்கிழமை நடைபற்ற கால் இறுதியில் இப்போட்டியின் தரவரிசையில் 2வது இடத்தில் உள்ள ரோஜர் ஃபெடரர் 6 - 3, 6 - 0, 6 - 0 என ஆர்ஜென்டீனாவின் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோவை வீழ்த்தினார்.

முதல் செட்டை 35 நிமிடங்களில் வென்ற ஃபெடரர் அடுத்த 2 செட்களில் தான் சாம்பியன் வீரர் என்பதை பறைசாற்றினார். 2வது செட்டை 26 நிமிடங்களிலும் 3வது செட்டை வெறும் 19 நிமிடங்களிலும் கைப்பற்றினார்.

இந்த ஆட்டத்தில் ஃபெடரர் 12 'ஏஸ்'கள் வீசினார்.

**வெளியேறினார் ஜோக்கோவிக்** - மற்றொரு காலிறுதியில் அமெரிக்காவின் ஆன்டி ராடிக் 6 - 7 (3), 6 - 4, 6 - 2, 2 - 1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்த போது செர்பியாவின் நோவக் ஜோகோவிக் வெயிலைத் தாக்குபிடிக்க முடியாமல் ஆட்டத்திலிருந்து வெளியேறினார்.


தொடர்ச்சி 22ஆம் பக்கம்



**எஸ். கணேஷ்**


**Raphael Maharaja** கனேடியத் தமிழ் வழக்கறிஞர்

Barrister, Solicitor & Notary Public



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



Tel: 416-847-7077 Fax: 416-847-7088

# இந்தியாவில் ஆஸ்தி நிலைமை

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 291**

நம்மவர்களின் பலர் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, United Arab Emirates (UAE) போன்ற பல நாடுகளின் ஆஸ்தியில் முதலீடு செய்து வருவதனால் இந்தியாவில் ஆஸ்தி நிலைமையைப் பற்றி இந்த இதழில் ஆராயலாம்.

கடந்த பல வருடங்களாக உலகின் அனேகமான நாடுகளில் ஆஸ்தியின் விலை அதிகரித்தே வந்துள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைத்தமாதிரி 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு பிற்பாடு அமெரிக்காவில் விலை இறங்கத்தொடங்கியது. இதனைத் தொடர்ந்து பல நாடுகளிலும் விலை இறக்கம் தொடர்கதையாக தொடர்கின்றது. இந்த நிலைமை கனடாவில் 2008இன் நடுப்பகுதிக்கு பின்னர் ஆரம்பமான போதிலும் கடந்த ஆண்டின் இறுதி நாலு (4) மாதங்களில் இதன் தாக்கத்தை பொதுவாக அவதானிக்க கூடியதாக இருந்தது.

இந்தியா, இந்த உலகத்தில் 12வது பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடு. (அமெரிக்கா முதலாவது பெரிய பொருளாதாரத்தை கொண்டது.)

இந்தியாவின் முன்னைய சந்ததி, பொதுவாக ஒரு பொருளை வாங்குவது என்றால் மொத்தப்பணத்தையும் கொடுத்தே பொருட்களை வாங்குவது வழக்கம். வங்கியில் கடன் பெற்று வாங்குவது மிக அரிதாகவே காணப்பட்டது.

ஆனால் புதிய சந்ததியின் நிலைப்பாடு வேறானது. வடஅமெரிக்கா, ஐரோப்பாவில் உள்ளது போல கடன் பெற்று வாங்கும் முறையைப் பின்பற்றுகிறார்கள். இதற்கு வெளிநாடுகளின் தாக்கமே காரணமாகக் கொள்ளலாம். உதாரணமாக அபிசேக் என்பவர் தனது 25வது பிறந்த தினத்திற்கு மாருதி கார் ஒன்றை வாங்கினார். அபிசேக், இந்தியாவில் Real Estate Marketing Executive ஆகத் தொழில்புரிபவர். இந்தக் காரின் பெறுமதி ரூபா 600,000 (US $15,000). இந்தக் காரை வாங்குவதற்கு 14.5% வட்டிவீதத்தில் கடனைப் பெற்று, மாதாந்த கொடுப்பனவில் வாங்கியுள்ளார். இதற்கு காரணமாக 2007 இல், இந்தியாவில் 15.1% வருமான அதிகரிப்பு பொதுவாக ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்ததியில் உள்ளவர்கள் போதியளவு சம்பளம் வருமானம் பெற்று, அந்த வேகத்தில் செலவு செய்வதை பழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அபிசேக் போலவே பலர் தமது வாழ்க்கை முறையை அமைத்துள்ளார்கள்.

அண்மைக்காலங்களில் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியில், இந்தியாவிலும் இந்த நிலைமையின் தாக்கம் ஆரம்பித்தது. 2008 நவம்பரில் வாகனங்களின் விற்பனையில் 23.7% இறக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த 8 வருடங்களில் இதுவே மிகப் பெரிய இறக்கமாகும். இருந்தும் இந்தியாவில் பொருளாதாரமும் (மார்ச் 2009 வரை) 6.8% வளர்ச்சி அடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (முந்திய பொருளாதார வளர்ச்சி 9% ஆகும்).

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக ஜனவரி 02, 2009 ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசினால் புதிய பொருளாதார ஊக்குவிப்பு பொதி (Financial Stimulus Package), கொண்டு வரப்பட்டுள்ளது. அண்மையில் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளும், இவ்வாறான ஊக்குவிப்பு பொதிகளை வெளிப்படுத்தின.

கடந்த பல மாதங்களில் இந்திய றிசேவ் (Reserve) வங்கி தனது 4வது வட்டிவீத இறக்கத்தை செய்தது. இதனால் கடந்த 8 வருடங்களில் குறைந்த வட்டிவீதமான 5.5% இலிருந்து 6.5% இற்கு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்திய முதலாவது பொருளாதார ஊக்குவிப்பு பொதியை மத்திய அரசு டிசம்பர் 07, 2008 இல் கொண்டுவந்தது. (இதன் பெறுமதி 4 பில்லியன் அமெரிக்க டொலர்). இந்திய பணவீக்கமும் இறங்கத் தொடங்கியுள்ளது. டிசம்பர் 2008 இன் பணவீக்கம் (Inflation) 6.61% ஆகக் குறைந்துள்ளது. (கடந்த 9 மாதங்களில் மிகக் குறைந்த பணவீக்கம்) பொதுவாக பொருளாதார வளர்ச்சி இறங்கும் போது பணவீக்கமும் இறங்கும்.

மேலும், வீடு வாங்குவதற்குரிய வட்டிவீதமும் குறைக்கப்பட்டுள்ளது. கனடாவில் உள்ளது போலல்லாது இந்தியாவில் இரண்டு வீதமான வட்டிவீதம் காணப்படுகின்றது. வீட்டின் பெறுமதி ரூ. 500,000 (US $12,500) இற்கு குறைவாக 2.5% ஆகவும் ரூபா 2 மில்லியன் வரை 9.25% ஆகக்காணப்படுகின்றது. அண்மைக்காலத்தில் இந்த வட்டிவீதம் 12% ஆகக் காணப்பட்டது என்பது அவதானிக்கத்தக்கது.

இருந்தும், இந்த இரண்டு பொருளாதார ஊக்குவிப்பு பொதிகளாலும், பெரிதளவான மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை என பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளார்கள்.

பொதுவாக விலைகளில் இறக்கம் ஏற்படுவதனால் மட்டுமே பொருளாதாரத்தை ஊக்குவிக்கலாம் எனவும் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

அமெரிக்காவில் ஏற்பட்டது போல, இந்தியாவிலும் ஆஸ்தி விலை குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. மும்பாயை மையமாகக் கொண்ட, Centrum Research என்ற ஆஸ்தி சம்பந்தமான நிறுவனத்தில் தொழில்புரியும் Hardeep Dayal என்பவரின் கருத்துப்படி ரூபா 2 மில்லியனிற்கு (US $50,000) மேற்பட்ட வீடுகளிற்குரிய கடனிற்குரிய வட்டிவீதம் நிச்சயம் குறைக்கப்படல் வேண்டும். இதுவே ஆஸ்தியின் பெறுமதியின் இறக்கத்தை தவிர்க்க வழிவகுக்கலாம் எனக் கூறியுள்ளார்.

2007ஆம் ஆண்டின் மத்தியிலிருந்து டிசம்பர் 2008வரை, ஆஸ்தி விலையில் 20% இறக்கம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் வாடகையின் பெறுமதி 50% இனால் குறைந்துள்ளது. பல வெளிநாட்டவர்கள் வேலையை இழந்ததனால் வீடுகளை விட்டு வெளியேறிக்கொண்டு இருக்கிறார்கள். அபிசேக்கின் வருமானமும் 20% இனால் இறக்கப்பட்டுள்ளது. மாதாந்த கொடுப்பனவில் இவரிற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. செலவுகளை குறைப்பதே ஒருவழி. (இந்தியாவில் தொழில்புரிந்த வெளிநாட்டவர் பலர் தமது தொழிலை இழக்கத்தொடங்கியுள்ளனர்)

இவர் மட்டுமல்ல இந்தியாவின் மத்தியதர மக்களின் அபிலாசைகளான கார், தொலைபேசி, 2 Phone, Stereos...போன்றவற்றின் வியாபாரம் ஆகஸ்ட் 2008 இலிருந்து 15% இறக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய கார் உற்பத்தியாளர் Maruty Suziki தமது உற்பத்தியை 6.3% இனால் இறக்கியுள்ளார்கள். அத்துடன் இந்தியாவில் இயங்கிவரும் Hyundai 25% இனால் உற்பத்தியை குறைத்துள்ளார்கள். இவ்வாறே TATA MOTORS LTD, ASHOK LEYLAND போன்ற நிறுவனங்களும் உற்பத்தியை குறைத்துள்ளார்கள்.

இதனால் மேலதிக மக்கள் தமது வேலையை இழக்க சந்தர்ப்பம் ஏற்படலாம். ஏற்கனவே ப. சிதம்பரம், நிதி அமைச்சராக இருந்த போது, பொருளாதாரம் ஆரோக்கியமான நிலையில் இருந்தது. இப்பொழுது இவர், உள்துறை அமைச்சர் (Home Minister) பதவிக்கு மாற்றப்பட்டது இந்தியாவின் பொருளாதாரத்திற்கு சிறந்ததல்ல என்றே தோன்றுகின்றது. இன்றைய நிலைமையில் இந்தியாவிலும் ஆஸ்தியின் விலை ஒரு குறிப்பிட்ட காலம் தொடர்ந்து இறங்கி வரும் போலவே தோன்றுகின்றது.

| | | |
|---|---|---|
| சனத்தொகை | 1148கோடி(1.15 பில்லியன்)(2008) | |
| GDP வளர்ச்சி | (2006/2007) | 9.6% |
| பணவீக்கம் | யூலை (2008) | 12.01% |
| தொழிலற்றோர் | (2006) | 7.8% |

**முக்கிய ஏற்றுமதி நாடுகள்**

| | |
|---|---|
| அமெரிக்கா | 18% |
| சீனா | 8.9% |
| ஐக்கிய அரபிக் எமிறேற்றல் | 8.4% |
| இங்கிலாந்து | 4.7% |

**மொத்த ஏற்றுமதி**

163 பில்லியன் (2007/2008)

| | |
|---|---|
| இறக்குமதி | 188 பில்லியன் |
| பாவிக்கப்படும் பணம் ரூபா | |
| ஆகப்பெரியது | 1000 ரூபாதாள் |
| ஆகச்சிறிது | 1 ரூபாதாள் |


ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், **140**இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

# CATERING / RESTAURANT FOR SALE

- Running business
- Location: Markham / Eglinton
- Resonable Rent
- Recently renovated
- Asking price $45,000 only
- Don't miss this chance

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# இகபரப் பதிகம்

உலகெ லாமொலி ஓரொலி ஓமொலி
பலரும் கண்டு பணியக் கருணையால்
மலைவில் யானை வடிவினில் வந்துள்ள
தலைவரின் திருத் தாள்தலை தாங்குவாம்.

வானும் விண்ணும் வணங்கி வரம்பெறும்
தானொப் பிற்சிவ சக்தி முதற்பிள்ளை
ஞான மேனியர் நால்வேத நாதனார்
ஆனை மாமுக அண்ணலைப் போற்றுவாம்.

மூல மந்திர முகத்தினைக் கொண்டவர்
கால ஊழிக் கணக்குகள் வென்றவர்
மால யன்தேவ மன்னும் வணங்கிடும்
மேல வர்பிள்ளை யாரருள் வேண்டுவாம்.

கல்வி கற்கவும் கற்றதில் நிற்கவும்
பல்வகைக் கலை பயின்றரங் கேறவும்
செல்வம் சேர்க்கவும் சீரறஞ் செய்யவும்
வல்ல மாகண பதியை வணங்குவாம்.

புத்தி சித்தி பொருந்திச் சிறக்கவும்
வித்துவம் நன்கு விருத்தியுற் றோங்கவும்
பத்தி செய்து பரவி அனுதினம்
சித்தி விநாயகர் திருவடி போற்றுவாம்.

தளர்ச்சி நீங்கவும் ஊக்கம் தழைக்கவும்
அதிர்ச்சி அல்லல் அலைச்சல் அகன்றுநல்
முயற்சி முட்டின்றி முற்றுற வாகவும்
புகழ்ச்சி மிக்கவே கம்பரைப் போற்றுவாம்.

ஆசை ஆடம்ப ரங்கள் அடங்கவும்
பாசம் நீங்கவும் பக்குவம் தாங்கவும்
பூசு நீறுபோல் உள்ளம் பொலியவும்
ஈசர் ஐங்கரப் பிள்ளையை ஏத்துவாம்.

ஏய மச்சம் குடிவகை இன்றியும்
நோய்கள் இன்றியும் நூதன இவ்வுடல்
கோயி லாக விளங்கக் குருபரன்
ஆய ஆனை முகனருள் வேண்டுவாம்.

சோத னைதுயர் வென்று துலங்கவும்
நீதி நேர்மையில் நின்று நிலைக்கவும்
காதல் செய்து கணபதிப் பிள்ளையார்
வேத வார்கழல் வீழ்ந்து வணங்குவாம்.

பித்தம் தீரவும் சித்தம் தெளியவும்
தத்துவப் படி தாண்டிக் கடைசியில்
முத்தி இன்பத்தில் மூழ்கித் திளைக்கவும்
அத்தி மாமுக ஐயனை வேண்டுவாம்.

கவிஞர் வி. கந்தவனம்



# மீண்டும் மெய்ஞானம்



ஏன் இந்தப்பூமி
பாதியாக
பிளந்து கிடக்கின்றது
ஏன் இந்த வானம்
பாதியாக
பிளந்து கிடக்கின்றது
ஏன் இந்தக் கடல்
பாதியாக
பிளந்து கிடக்கின்றது
ஏன் இந்தச் சூரியன்
பாதியாக
பிளந்து கிடக்கின்றது
ஏன் இந்த இதயம்
பாதியாக
பிளந்து கிடக்கின்றது

ஈக்களும் கொசுக்களும்
மூக்கினுள் குடியிருக்கின்றன
நுளம்புகள் காதுக்குள்ளே
இசைபாடிக்கொண்டு
காலில்
குருதி குடிக்கின்றன

ரொட்டிக்கும்
கஞ்சிக்கும்
ஏழைகள்
பஞ்சாகப் பறக்கின்றனர்

உபரிப் பண மூடைகள்
சாம்பலாகக்
காற்றுடன் கலக்கின்றன

ஏன் இந்தப்பூமி
பாதியாக
பிளந்து கிடக்கின்றது…?



முத்துராஜா

# ஏழைக்கவிஞனின் ஏக்கம்?

அன்று!
மணியொலி கேட்டு மளமள வென்று
மதிமுகம் கழுவி மைம்மல் பொழுதினில்
காளைகள் பூட்டி கடகட வெனவே
பட்டைகள் நிரம்பிப் பாயும் நீரினை
முட்டியில் நுகர்ந்து முளைத்திடும் பயிருக்கு
குனிந்து குனிந்து குளிர்ந்திட ஊற்றியே
விரைவாய் மீண்டும் வீட்டினை யடைந்து
மனையாள் படைப்பவை மகிழ்ந்து உண்டு
வேளாவேளைக்கு வேலைக்குச் சென்று
மாலைவேளையில் மனைக்குத் திரும்பி
படலையில் பார்த்திடும் பத்தினியாள் கண்டு
உள்ளம் உருகி உடல்நோ மறந்து
கைகால் களுவித் கந்தனார்வைத்திடும்
ஒருபனைக் கள்ளினை ஊதியே குடித்து
குழந்தைக ளுடனே கும்மாளம் கொட்டி
அனைவரும் கூடியே அறுசுவை யுண்டு
பிள்ளைகள் படிப்புக்கள் பிற்காலம் போன்றவை
அன்னையும் தந்தையும் அன்புடன் பேசி
கண்ணினைப் போலவே பிள்ளைகள் பார்த்து
பொன்னினைப் போல பேற்றோரைப் பேணியும்
தொண்ணூறில் மறையினும் துடித்து அழுதிடும்
மண்ணின் வாசனை மறக்க முடியுமா?

இன்று!

மணிக்கூட் டலறலில் திடுக்கிட்டு எழுந்து
அவதி யவதியாய் அலசிய வாயுடன்
கொதித்திடும் கோப்பியைக் கையினில் ஏந்தியே
கொட்டும் குளிரோ கொதிக்கும் வெய்யிலோ
வெற்று வயிற்றுடன் வாகனம் ஏறியே
பந்தயம் போலோடும் பறக்கும் பாதையில்
இயந்திரம் போலவே இரவும் பகலும்
இருவேலை செய்திட இருவரும் ஓடியே
அண்ணனைவிடப் பெரும் அரண்மனை வாங்கியும்
ஊரிலில்லாப் பெரும் ஊர்தியை வாங்கியும்
கடின உழைப்பினாற் களைத்துச் சோர்ந்துமே
கதவினைத் திறந்து கடிதங்கள் பார்க்கையில்
வங்கிக் கடனுடன் வாகனக் கடனும்
தொங்கியே நின்றிடும் தொடர் வட்டியும்
மின்சாரக் கட்டணம் மீள முடியாத
எத்தனை கடன்கள் எண்ணிட எண்ணிட
ஏறிடும் இரத்தக் கொதிப்பொடு ஏகிட
வாய்க்குவாய் காட்டியே வாய்த்தர்க்கம் போட்டிடும்
பெண்டிரும் பிள்ளையும் பித்தனாய் ஆக்கிட
முட்டலும் மோதலும் வீட்டில் மலிந்திட
பட்டென எடுத்திடும் முடிவொடு அழுத்திட
கிட்டிடும் காவலர் கைமாட்டி போட்டிடக்
குடும்பம் கலைந்து கோட்டடி எய்திட
பெற்றவர் இதயம் பித்துப் பிடித்திட
உற்றமண் வாசனை ஊரின் மகிமைகள்
தொட்டு இழுக்குது தோன்றுமோ ஈழம்?

*- ஆக்கம்: அருட்கவி ஞானகணேசன்*




SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537** 24 hrs, 365 days



**யோகா சோதிடம்**

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...


# Elaguppllai (Mike) Srinathan B.Sc


## Sales Representative

## Dir: 416-276-1225 Off: 905-470-9800

**Email: esrinathan@trebnet.com**


**Mccowan/Denison**




**$279,000**
Link 2 story, Bed rooms 3, Washrooms 3
Close To All Amenities. Laminate Floor In Living Room. Roof 2008.Cac 2004.

**Sandlewood / Brisdale**



**$314,900**
Detached 2 story, Bed rooms 3 , Washrooms 3
Open Kitchen With Upgraded Ceramic Floor, Fully Fenced Yard

**Brimley/Steeles**



**$298000**
Link 2 Story Bed rooms 3 , Washrooms 3
$30,000 Spent On Upgrading This Absolutely Stunning Home, Finished Basement

**9th Line/16th AveAve**




**$299,700**
Town House 2 story, Bed rooms 3, Washrooms 3
4Pcs Ensuite In The Master Bedroom, Two Full Washrooms . Dream Kitchen

**Middlefield/Denison**



**$310,900**
Link 2 Story, Bedrooms 3, Washrooms 2 ,
Eat-In Kitchen With Walk-Out To Yard. Unfinished Basement

**Markham/14th Avenue**



**$334,000**
Detached 2 Story, Bedrooms 3+! Wasroom 4,Seperate Entrance To Basement;Brick 3+Bedroom 2 Storey;Three 4 Piece Washrooms

**Markham Rd/14th**



**$350,000**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3,
Full-Brick, Steel-Framed Home. Sellers Are Origincal Owners

**Mccowan/Mcnicoll**



**$359,900**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,
Hardwood And Ceramic Tiles On Main Floor,Close To T&T, Ttc, Schools

**Markham/SteelesAve**




**$364,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3
Hardwood Floors! Kitchen W/ Upgraded Cabinets, Close To Ttc, Shopping & Schools!

**Brimley/Steeles.**



**$369,000**
Link2 Story , Bed rooms 4+2 Washrooms 4, A 2000 Sq Ft. Plus On Huge Lot. Close To School, Shop, Bus

**Kennedy/Denison**



**$378,000**
Link 2 Story, Bedrooms 4 Washrooms 3, Double Garage Steps To Pacific Malls, Schools, & Park.

**Derry/10th Line-**



**$379,900**
Detached 2 Storys, Bed rooms 3, Washrooms 3,
Separate Entrance From Garage , Close To All Amenities Including Schools,

**9th Line/Russell Jarvis**




**$379,900**
Detached 2 Story, Bedrooms 3+1, Washrooms 3,
The Finished Basement Complete W/Bdrm,Exercise Rm/Office

**Markham Rd & Steeles**



**$379,900**
Detached 2 Story, Bedrooms 3+1 Washrooms 3
Window,Upgraded Through House, Gorgeous Eat-In Kitchen W/Breakfast Bar

**Denison/Markham**



**$419,900**
Detached 2 Story, Bedrooms 4+2, Washroom 3
Professionally Finished Basement Apartment W/Seprate Entrance

**Meadowvale / Sheppard**



**$445,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 2 Years OldClose To Ttc, Hwy #401, And Shopping

**9th Line & 14th**



**$449,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3,Upgraded Stone Elevation & Vinyl Windows, Upgraded Kitchen Large Driveway

**14th Ave/Chatelaine**



**$469,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Majestic Brick & Stone Front, Din Rm W/Hdwd Flr,Brkfst Area W/Hdwd Flr

**14th / East Of 9th Line**



**$619,900**
Detached 2 Story Bed rooms4 Was rooms 4
Stunning 1 Yr. New Arista Home Over 3300 S.F. & Over $50K Upgrade

**Kennedy/14th Ave**



**$649,000**
Detached 2 Story Bed rooms 5+1, Washrooms 4, Over $50,000 In Upgrades Professional Landscapping

**Sale Of Business**





**$2,775,000 for sale**
Sale Of Business With Property Gas Stations Multiple Business In One! Gas Station, Propane, Liquor Store (Lcbo),

**Sale Of Business**



**$1,700,000**
Sale Of Business WithProperty Gas Stations New Look Esso Gas Station, Car Wash And Convenience Store

**Vacant Land**



**$199,900**
Vacant Land Comprising 98 Acres Of Trees Located Off Highway 12 Between Brechin & Orillia In An Area Of Future Growth.

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# 'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

## மூலிகைப்பொருட்கள் இரச குணவீரிய விபாங்களுக்கு (தன்மைகளுக்கு ) ஏற்ப வியாதிகளைக் குணமாக்கும்

**சீரகம்** - சீரகத்தில் நான்கு வகைகள் உண்டு. அவையாவன

1. சீரகம் - நற்சீரகம்
2. பெருஞ்சீரகம் -சோம்பு
3. கருஞ்சீரகம் - அரணம்
4. காட்டுச்சீரகம் - வனசீரகம்



இதில் நான்குவகைகளைக் கூறியபோதிலும் காட்டுச்சீரகம் இங்கு பெறுவது கஸ்டம். மற்றைய சீரகங்கள் இங்கு இலகுவில் வர்த்தகர்களின் கடைகளில் பெற முடியும்.

எனவே மற்றும் மூன்று வகையான மூலிகை வர்க்கக் கடைச்சரக்கான சீரகங்களின் தன்மைகளையும் அவை ஆற்றும் செயல் திறனையும் சற்று உற்று நோக்குவோம்.

**சீரகம் -** இதன் தாவரவியல் பெயர் CAMINUM CYMINUM ஆகும். இதனை நற்சீரகம் எனவும் அழைப்பர். அகம் என்பது தேகத்தைக் குறிக்கும். எனவே சீரகம் (சீர் + அகம்) நமது தேகத்தைச் சீர்ப்படுத்த வல்லது சீரகமாகும். இதில் பயன் படுத்துவது விதையாகும். இதற்கு மணமுண்டு. சீதவீரியத் தன்மை வாய்ந்தது. கசப்பான சுவை உடையது.

இச்சீரகத்தை நாம் சமையல் செய்யும் போது சில கறிவகைகளில் சேர்ப்பதுண்டு. பசியை அதிகரிக்கும் ஆற்றல் உள்ளது. வாதரோகங்களைக் கண்டிப்பதுடன் வாயுத்தன்மையும் அகற்றக்கூடியது.

இச்சீரகத்தை முக்கியமாக பத்திய பாவனைக்கு எடுப்பதும் உண்டு. அதாவது கெற்பவதி குழந்தையைப் பெற்றெடுத்தபின் அவர் உண்ணும் உணவில் இச்சீரகக் கூட்டுக் கறியைக் கொடுத்து அவர் தேகநிலையை சுகநிலைப்படுத்திக் கொண்டு வருவதை சில இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. தாய்நாட்டில் கிராமப்புறங்களில் அதிகமானோர் இதனை விரும்பி கையாண்டு சுகதேகிகளாக வாழ்ந்தவர்களும் உண்டு. மற்றும் சிலர் குளிர், தடிமல், இருமல், தேக சோர்வு, பசியின்மை, அசீரணம் போன்ற நிலையில் உள்ளோர் உண்ணும் உணவுடன் இச்சீரகக் கூட்டுச் சரக்கில் பாகம் செய்யும் இரசத்தை விரும்பிப் பாவித்துப் பயன் பெற்று வருவதையும் காண்கின்றோம். பெரும்பாலும் முக்கியமாக முதியவர்கள் இதனை மறப்பதில்லை.

எனவே இச்சீரகத்தின் செயலாற்றலை நோக்குவோமானால் ஒருவருக்கு இருமல் காணப்படும் போது நன்கு துப்பரவான சீரகம் 1/4 தே. கரண்டி எடுத்து பனங்கற்கண்டு கூட்டி வாயில் இட்டு பற்களினால் நன்கு மென்று சிறிதளவு தண்ணீர் குடிக்க இருமல் குறைந்து சுகநிலைக்கு வருவதைக் காணலாம்.

ஓரளவு சுத்தமான நல்லெண்ணெயில் ஒரு மே.கரண்டி சீரகத்தையிட்டு நன்கு சூடாக்கி இறக்கி ஆறியபின் தலையில் இட்டுத் தேய்த்து நீராடி வர கண் எரிவு உடல் சூடு, தலைகிறுகிறுப்பு யாவும் தீர்வதுடன் நன்கு சுகதேகியாகக் காணப்படுவர்.

மேலும் முகத்தில் பருக்கள் ஏற்படும் போது சுத்தமான சீரகத்தையும் + கருஞ்சீரகத்தையும் பசுவின் பால் இட்டு அரைத்து பசைத்தன்மையாக வரும்போது எடுத்து பருவுள்ள பகுதியில் பூசி 30 நிமிடங்கள் சென்ற பின் முகத்தை நன்கு கழுவிக்கொள்ள வேண்டும். இப்படி ஒரு நாளில் காலை, மாலை இருவேளை செய்து வர பூரண குணம் கிடைத்து முகம் அழகுடன் காட்சி தரும்.

சாதாரணவயிற்று வலி ஏற்பட்டு வைத்தியர்களிடம் செல்லத் தாமதமானால் உடனே சீரகத்தில் சிறிதளவு எடுத்து வாயில் இட்டு நன்கு பற்களினால் மென்று சிறிதளவு வெந்நீர் அருந்தச் சுகம் கிடைக்கும்.

உடம்பில் உள்ள பித்த ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த சுத்தமான சீரகத்தை எடுத்து கொத்தமல்லியும் சேர்த்து (ஒரு தேக்கரண்டி சீரகம், இரண்டு தே.கரண்டி மல்லி) ஒரு சுண்டு தண்ணீரில் இட்டு நன்கு சூடாக்கி இறக்கி ஆறியபின் காலை, மாலை ஒரு மேசைக்கரண்டி வீதம் பாவித்து வரக் குணம் பெற்று விடுவீர்கள்.

நல்ல வெற்றிலை ஒன்றை எடுத்து சிறிதளவு வாட்டி எடுத்து அதில் சிறிதளவு சீரகத்தை போட்டு வாயில் இட்டு மென்று வெந்நீர் குடிக்கப்பசி, ருசி ஏற்பட்டு சீரண சக்தியும் இயல்பான நிலைக்கு வந்துவிடும்.

தேகத்தில் ஏற்படுகின்ற அரிப்புத் தன்மையான சர்மவியாதிக்கு சீரகத்தில் ஓரளவு எடுத்து நீர்விட்டு நன்கு அரைத்து உரிய இடத்தில் நன்கு பூசித் தேய்த்து நீராடி வர குணம் கிடைத்து விடும்.

மூலம் ஓரளவு வெளியில் தெரியும் தன்மை ஏற்பட்டால் சீரகத்தை எடுத்து நன்கு நீர்விட்டு அரைத்து உரிய பகுதியில் பூசிவர நாளடைவில் மாற்றம் காணப்பட்டு குணம் கிடைத்து விடும்.

சிலருக்கு வாய் பகுதியில் உமிழ்நீர் அதிகம் ஊறியபடி இருக்கும். அவ்வேளை துப்பரவான சீரகத்தைச் சிறிது எடுத்து வெல்லத்துடன் சேர்த்து மென்று வர விரைவில் குணம் கிடைக்கும்.

சிலருக்கு மாதவிடாய் ஒழுங்கீனமாக இருப்பதுண்டு. இவ்வேளையில் சீரகத்தை எடுத்து குடிநீர் தயாரித்து காலை, மாலை இருவேளை ஒரு மேசைக் கரண்டி வீதம் பாவித்து வர பூரண சுகம் கிடைத்து விடும். எதற்கும் வைத்தியர்களின் ஆலோசனை சாலச்சிறந்தது.

பெண்களுக் ஏற்படும் வெள்ளை, வெட்டை, மேகம் போன்ற வியாதியை உடையவர்களும் சீரகக் கசாயத்தில் + வெல்லம் கூட்டுப் பாவித்து வந்தால் நாளடைவில் சுகம் கிடைக்கும். பால் கொடுக்கும் தாய்மாரும் பால் நன்கு சுரப்பதற்கும் சீரகக் கசாயம் (குடிநீர்) பயன் தரவல்லது.

மேலும் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் தாங்கள் தயாரிக்கும் மருந்துவகை சிலவற்றுக்கு முக்கியமாகச் சீரகத்தை மற்றும் மூலிகை வர்க்கச் சரக்குகளுடன் சேர்த்துக்கொள்வதுண்டு. உதாரணமாக சில லேகியம், தைலம், சூரணம், குளம்பு போன்றவற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அவற்றில் சில -
வில்வாதி லேகியம்
அகஸ்தியர் குழம்பு, லேகியம்
சந்தனாதித் தைலம்
சஞ்சீவித் தைலம்
போன்றவற்றை எடுத்துக் கூறலாம்.

**பெருஞ்சீரகம்** - இதனைச் 'சோம்பு' எனவும் அழைப்பர். இதன் தாவரவியல் பெயர் PIMPINELA ANISUM ஆகும். இதன் பூ, வேர், விதை என்பன பாவனைக்கு கையாளப்படுகின்றது. இதில் நல்ல மணம் குணம் உண்டு. நாம் சமையல் செய்யும் போது கறிவகைகளுக்கும் பாவிப்பதுண்டு. வாயுத்தன்மையையும் நீக்கி பசியை நன்கு ஏற்படுத்தும்.

நமது வயிற்றில் ஏற்படும் சிறு நோய்கள் நீங்கச் 'சோம்பு' எனக் கூறப்படும். பெருஞ்சீரகத்தை எடுத்து இளவறுப்பாக வறுத்துப் பொடியாக்கி காலை, மாலை 1/4 தே.கரண்டி எடுத்து சர்க்கரை சேர்த்துப் பாவித்துவர யாவும் தீர்ந்து விடும்.

மேலும் சித்த, ஆயுர்வே வைத்தியர்கள் தாங்கள் தயாரிக்கும் சில மருந்துகளில் கூட்டு மூலிகைச் சரக்குகளுடன் சேர்த்துக் கொள்வதுண்டு. உ+ம் சடாமாஞ்சில், திருமூர்த்தி சூரணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

கருஞ்சீரகம் - இதன் தாவரவியல் பெயர் NIGELLA SATIVU ஆகும். 'அரணம்' எனவும் வேறுபெயர் கொண்டு அழைப்பதுண்டு. கைப்புச் சுவையை உடையது. உஸ்ணவீரியம் தன்மையானது. கருமை நிறம் கொண்டதாக இருக்கும்.

சர்மரோகமான சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற வியாதிகளுக்கு இதனை நன்கு தூள் செய்து, நல்லெண்ணையில் குழைத்து வெளிப்பிரயோகமாக, காணப்படும் இடத்தில் பூசிவர நாளடைவில் குணம் கிடைக்கும்.

மற்றும் பசியின்மை, ஏப்பம், பொருமல், வயிற்றுவலி, அசீரணம் போன்றவற்றுக்கு தகுந்த முறைப்படி குடிநீர் செய்து காலை, மாலை ஒரு தே.கரண்டி வீதம் (வயதிற்கு ஏற்ப) கொடுத்துவர நிவிர்த்தி பெறுவீர்கள். (1½ கரண்டி கருஞ்சீரகம் ஒரு சுண்டு தண்ணீர்)

முகத்தில் ஏற்படுகின்ற பருக்களுக்கும் கருஞ்சீரகம் + நற்சீரகம் ஒரு தே.கரண்டி வீதம் எடுத்து பசுப்பாலில் நன்கு அரைத்து உரிய இடத்தில் பூசிவர குணம் கிட்டும். பூசிய இடத்தை ½ மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரினால் முகத்தை கழுவிக் கொள்ள வேண்டும்.


கருஞ்சீரகத்தைப் பொடி செய்து வெந்நீருடன் காலை, மாலை பாவித்து வந்தால் வயிற்றிலுள்ள புழுக்கள் வெளிப்படும். கருஞ்சீரகத்தை நன்கு பொடி செய்து தேன் கூட்டிப் பாவித்து வந்தால் நாள் பட்ட இருமல், கம்மல் யாவும் நிவிர்த்தியாகும். விக்கல் நிலை இருந்தால் இதன் தூளை எடுத்து மோரில் கலந்து பாவித்து வர நின்று விடும்.

சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் தாங்கள் தயாரிக்கும் சில மருந்துகளில் மற்றும் கூட்டுச் சரக்குகளுடன் சேர்ப்பதுண்டு. தைலங்கள் சில வற்றிலும் பாவிப்பார்கள்.

**கறிவேம்பு** - இதன் தாவரவியல் பெயர் *Murraya koenigi* ஆகும். இதனைக் 'கருவேப்பிலை' எனவும் பெரும்பாலும் கூறுவர். இதில் உள்ள இலை, வேர், பட்டை, ஈர்க்கு என்பவற்றைப் பாவனைக்கு எடுத்துக் கொள்வர். உஸ்ணவீரியத்தையும், கசப்பான சுவையையும் தன்னகத்தே கொண்டது. இதன் இலையை அன்றாட உணவு வகைகளில் நாம் சேர்த்துக் கொள்வதுண்டு. நல்ல மணம் கொண்டதாகும்.

இது வேப்பிலையை ஒத்ததாக ஒரு நரம்பில் பல இலைகள் சேர்ந்ததே கறிவேப்பிலையாகும். ஆனால் வேப்பிலை போல இலை ஓரங்களில் வாள் போன்ற பற்கள் இருக்காது.

இதில் உயிர்ச்சத்து (Vitamins) A நிறைய உண்டு. சில வியாதிகளைக் குணப்படுத்துவதற்கும் பாவிப்பதுண்டு. இதன் குணத்தை விரிவாகப் கூறுகின்றார் நாலடியில்
'வாயினருசி வயிற்றுளைச்சல்வீடு சுரம்
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுங்கான் - தூய
மறுவேறு காந்தளங்கை மாதே! உலகிற்
கருவேப் பிலையருந்திக்காண்'.



எனவே இதன் சிறப்புத் தன்மை மேலும் சற்று உற்று நோக்குவோம்.

நமது வயிற்றில் மந்தத்தன்மை, மலக்கட்டு, சுவையின்மை காணப்படும் போது, கருவேப்பிலையை உலர்த்தி சுக்கு (வேர்க்கொம்பு), மிளகு, உப்பு, நற்சீரகம் கூட்டிப் பொடியாக்கி உணவுடன் கலந்து நெய்யும் ஓரளவு சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் யாவும் நிவிர்த்தியாகும்.

கொப்புளிப்பான் (Chickenpox) அம்மை வடுமாற கறிவேப்பிலையை ஓரளவு எடுத்து அத்துடன் கஸ்தூரிமஞ்சள் பொடியுடன் சேர்த்து நன்கு அரைத்து பச்சைத் தன்மையாகப் பாகம் செய்து காயம் (மறு) உள்ள இடத்தில் தடிப்பாகப் பூசி அரை மணிநேரத்தின் பின் இளம் சூடான வெந்நீரால் முகத்தைக் கழுவிவிட பூரணகுணம் கிடைக்கும். இப்படி காலை, மாலை செய்து வரவேண்டும்

மேலும் குழந்தைகளுக்கு வயதிற்கு ஏற்ப கறிவேப்பிலை சிறிது எடுத்து 2, 3 மிளகும் சேர்த்து இளவறுப்பாக வறுத்து, பின் வெந்நீர் இட்டு அரைத்து வெந்நீரில் கலக்கி வயதிற்கு ஏற்ப 1/4 அல்லது ½ தேக்கரண்டி வீதம் காலை, மாலை கொடுத்துவர வயிற்றில் உள்ள மந்தக்குணம் மாறி நன்கு பசியை உண்டாக்கும் தன்மை உடையது. எனவே எதற்கும் வைத்தியர்களின் ஆலோசனை பெறுவது நன்மை பயக்கும்.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013




# நன்றி நவிலும் நாள் தைப்பொங்கல்

ஜனவரி 15, 2009ம் நாள் வெளிவந்த விளம்பரம் பத்திரிகையில் பிரசுரமான மேற்கூறிய கட்டுரை சம்பந்தமாக வந்த சில கேள்விகளுக்கு அக்கட்டுரை ஆசிரியர் தரும் பதில்கள்

1. திருவள்ளுவர் பிறந்த திகதி ஒருவருக்கும் தெரியாதா?
திருவள்ளுவர் பிறந்த திகதி இதுவரை சரித்திர சான்றுகளோடு நிரூபிக்கப்படவில்லை. தமிழ் அறிஞர்கள் சிலர் 1921 ஆம் ஆண்டு ஒன்று கூடி திருவள்ளுவர் இயேசு கிறிஸ்து பிறக்க 31 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்திருக்கலாம் என்று அவர் பிறந்த திகதியை ஜனவரி 15ஆம் திகதியாக எடுக்கலாம் என்றும் முடிவு எடுத்தார்கள். இது விடயமாக சரித்திரவியலாளர்கள் எவரும் ஆராய்ச்சி செய்து முடிவு எடுத்ததாக சான்றுகள் இல்லை. இதைவிட திருவள்ளுவரின் உருவம் என நாம் இப்போது பாவிப்பதும் ஒரு கற்பனை வடிவமே. சரித்தியவியலாளர்களின் ஆராய்ச்சிகளின்படி திருவள்ளுவர் இயேசு கிறிஸ்துவிற்கு பின்னர் 100 ஆம் ஆண்டிற்கும் 300 ஆண்டிற்கும இடைப்பட்டகாலத்தவர். கல்தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய மூத்தகுடி எமது தமிழ் சமுதாயம் என்று கூறும் நாங்கள் ஏன் புத்தரும் இயேசு கிறிஸ்துவும்
பிறந்ததிற்கு பிந்திய வள்ளுவரின் கற்பனையில் பிறந்த திகதியில் இருந்து எமது காலத்தை கணிக்கவேண்டும். தொல்காப்பியரோ அல்லது அவருக்கு முந்திய ஒரு தமிழ் அறிஞரின் கற்பனையில் பிறந்த திகதி ஒன்றை உருவாக்கி அதில் இருந்து எமது காலத்தை கணிக்கலாமே.

2. திருவள்ளுவர் பிறந்த திகதியை தைப்பொங்கல் தினத்துடன் இணைக்க முடியாதா?
தைப்பொங்கல் தினம் சூரியன் மகர ராசிக்கு போகும் ஒரு இயற்கை நிகழ்வு. இது சில வருடங்களில் 14ஆம் திகதியில் வரும்போது சில வருடங்களில் 15ஆம் திகதியில் வரும். ஆனால் ஒருவரின் பிறந்ததினம் மாறாது எப்போதும் ஜனவரி 15ஆம் திகதியாகவே இருக்கும். அவ்வாறாயின் திருவள்ளுவர் பிறந்த தினத்தை தைப்பொங்கலுடன் இணைக்க முயல்பவர்கள் தைப்பொங்கல் என்ற இயற்கை நிகழ்வை மாற்றி அதை ஜனவரி 15ஆம் திகதி என மாறாமல் வைக்க வேண்டும் என்கிறார்களா? அல்லது திருவள்ளுவர் பிறந்த தினத்தை தைப்பொங்கலுக்கு ஏற்ப சில வருடங்களில் 14ஆம் திகதி எனவும் சில வருடங்களில் 15ஆம் திகதி எனவும் மாற்றலாம் என்கிறார்களா? இது இரண்டுமே எவ்வளவு மடமை என நீங்கள் சிந்தித்து பார்த்தால் விளங்கும்.

திருவள்ளுவர் பிறந்த தினத்தை தைப்பொங்கல் தினம் என எடுப்பதை விடுத்து ஜனவரி 1ஆம் திகதி என எடுத்துக் கொண்டால் ஆங்கில வருடப்பிறப்புடன் சேர்த்து நாமும் வள்ளுவர் ஆண்டை கொண்டாடலாம் அல்லவா?

3. தமிழ் அறிஞர்கள் மற்றும் பகுத்தறிவு வாதிகள் கூறுவது தவறா?
பகுத்தறிவாதிகள் என தம்மை அழைப்போர் மதங்களுக்கு எதிராக வெறி கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மதங்களில் சொல்லும் தத்துவங்களை ஆராய்ந்து பார்க்கும் திறந்த மனப்பான்மை சிறிதும் அற்றவர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் அறிஞர்கள் என்போர் தமிழ் மொழியில் ஆழந்த அறிவு உடையவர்கள் ஆனால் அவர்களது விஞ்ஞான மற்றும் வான சாத்திர அறிவு கேள்விக்குரியதே.
மதங்களிலுள்ள பல நல்ல விளக்கங்களை எல்லாம் ஆராயாமல் எல்லாவற்றுக்குமே மூடநம்பிக்கை எனப் பெயர் சூட்டுபவர்கள் இவர்கள்.

இதனால் முழு சமுதாயத்தை பாதிக்கும் எந்த ஒரு முடிவை எடுக்கும்போது அக்குழுவில் 'தமிழ் அறிஞர்கள்' மட்டும் இல்லாமல் சமய அறிஞர்கள், விஞ்ஞானிகள், வான சாஸ்திரவியலாளர்கள் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் என எல்லா வகையான அறிஞர்களையும் சேர்த்து அலசி ஆராய்ந்து முடிவு எடுத்தால் அதை முழுச்சமுதாயம் ஏற்கும். அதை விடுத்து ஒரு சாரார் முடிவு எடுத்தால் அதை எல்லாராலும் ஒத்துக் கொள்ள முடியாது. சட்டம் போட்டு திணித்தாலும் எல்லாமக்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்பது கேள்விக்குறியே. 1921ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட முடிவு இதுவரை எல்லா மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருப்பதே இதற்கு ஒரு சான்றாகும்.

4. சித்திரையில் பிறக்கும் வருடங்களில் கணிப்பில் 60 ஆண்டுகள் மட்டுமே சுற்றி சுற்றி வருகின்றன. இதை தவிர்க்கவே வள்ளுவர் ஆண்டு தேவை என்கிறார்களே?
கிழமையில் ஏழு பெயர்களைக் கொண்ட நாட்கள் சுற்றி சுற்றி வருகிறது. மாதங்களில் 12பெயர்கள் சுற்றி சுற்றி வருகிறது. வருடத்தில் 60பெயர்கள் சுற்றி சுற்றி வருவதில் என்ன தவறு இருக்கிறது. இதைவிட காலக்கணிப்பில் தற்பரை, விநாடி, நாளிகை, நாள், கிழமை, மாதம், வருடம் என்பவற்றை தமிழில் ஏற்றுக் கொள்பவர்கள் ஏன் அதற்கு அப்பால் உள்ள காலக்கணிப்புகளான யுகம், சதுர்யுகம், மன்வந்தரம், கற்பம் என்பவற்றை ஏற்க மறுக்கிறார்கள். 4தரம் கிழமை சுற்றி சுற்றி வந்தால் மாதம் வருவதுபோல் 60 பெயர்களைக் கொண்ட வருடங்கள் 72ஆயிரம் தரம் சுற்றி வந்தால் ஒரு யுகம் வரும். இதைவிட வருடத்தின் பெயர்கள் 60ஆக இருந்தாலும் வருடங்களை தொடர்ந்து எண்ணிக் கொண்டு தான் வருகிறார்கள். கடந்த சித்திரையில் பிறந்த வருடம் இவ் யுகத்தின் 5110 ஆவது வருடம் ஆகும்.

5. வருடங்களின் 60 பெயர்களும் தமிழில் இல்லையே? எமக்கு இது ஒரு பிரச்சினை என்றால் இப்பெயர்களை தூய தமிழில் மொழி பெயர்க்கலாமே? தமிழில் ஏற்கனவே உள்ள சொற்களுக்கு மீண்டும் புதிய தமிழ் கலை சொற்களை உருவாக்குபவர்கள் ஏன் இவ்வருடங்களுக்கு தமிழ் பெயரை உருவாக்க முடியாது? இதை விடுத்து ஒரு விஞ்ஞான பூர்வமாக விளங்கக் கூடிய இயற்கை நிகழ்வை சரித்திர சான்றுகள் அற்ற ஒரு கற்பனை நிகழ்வாக மாற்றினால் எமது வருங்கால சமுதாயம் எம்மை எள்ளி நகையாடும்.

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகுகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**
**Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687**

# அலையாத்தி காடுகள் - பிரபாகரன் தீவு

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 53



உலகளவில் சதுப்பு நிலக் காடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடங்கள் தமிழகத்தில் நிறைய உள்ளன. மிகப் பிரபலமானது, சிதம்பரம் அருகில் இருக்கும் பிச்சாவரம். அது அனைவருக்கும் தெரியும் தெரியாதது, பிரபாகரன் தீவு. ஆம், உங்கள் சந்தேகம் சரிதான். விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் பெயரில் அமைந்த தீவுதான். இந்தத் தீவுக்கு பிரபாகரன் பெயர் எப்படி வந்தது என்பதை, அங்கே யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். வருகிறீர்களா இந்த வாரம் பிரபாகரன் தீவுக்குப் போகலாம்.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை கடலோரப் பகுதிகளில் வங்காள விரிகுடாவின் காயல் (பேக்வாட்டர்) இருக்கும் இடம் ஜாம்பவானோடை. காயல் வழியாக கடலுக்குச் செல்லும் வழியில் பல குட்டிக் குட்டித் தீவுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் பிரபாகரன் தீவு. உண்மையான பெயர் லகூன் தீவு. இந்தத் தீவை நோக்கிய பயணமும், தீவில் படகுச் சவாரி செய்வதும் மனதிற்கு இதமளிக்கும் ஒரு பயணம். "சொர்க்கத்திற்கு ஒரு படகு பயணம்" என்று சொல்லிதான் நம்மை படகுக்காரர்கள் வரவேற்கிறார்கள். அவ்வளவு அழகுப் புதையலாக இருக்கிறது அந்த குட்டித் தீவும், அதை நோக்கிய பயணத்தில் நாம் கடக்கும் கடலும். ரம்மியமான காட்சிகளைவிட நம்மை ஆச்சர்யப்படுத்துவது கடலின் பேரமைதிதான். அதற்குக் காரணம் இங்கிருந்து முத்துப்பேட்டை, அதிராம்பட்டினம், வேதாரண்யம், மல்லிப்பட்டினம் வரைக்கும் அடர்ந்து விரிந்து படர்ந்து கிடக்கும் அலையாத்திக் காடுகள்தான்.

கரையில் இருந்து நாம் புறப்பட்ட இரண்டாவது கிலோமீட்டர் தூரத்தில் குட்டிக் குட்டிக் குடில்கள் போல அலையாத்தி மரங்கள் கண்ணில் தென்படத் தொடங்கிவிடுகின்றன. அடர்த்தியாக வளர்ந்திருக்கும் இந்த மரங்கள் காரணமாக, வெயிலின் உக்கிரம் துளியளவும் தெரியாதபடி இதமான ஒரு குளிர்ச்சி அங்கே நிலவுகிறது. மேலும், போகப்போக அலையாத்திக் காடுகளின் அடர்த்தி அதிகமாகி, சாலை போட்டதுபோல், படகு போவதற்கு மட்டும்தான் வழி இருக்கிறது. இரண்டு பக்கமும் உயர்ந்திருக்கும் மரங்களுக்கு நடுவே தண்ணீரில் செய்யும் பயணம் சிலிர்ப்பூட்டும். தலைக்கு மேலே, நாம் இதுவரை பார்த்திராத விதவிதமான பல பறவைகள் அழகாக பறக்கின்றன. ஏழு அல்லது எட்டாவது கிலோமீட்டரில், வழியை மறைத்துக் கொண்டு நிற்பது போல், தூரத்தில் மரங்கள் அடர்ந்த ஒரு பகுதி தென்படும். மிக நெருக்கமாக வந்தபிறகுதான் அது ஒரு தீவு எனத் தெரியும்.

விதவிதமான மரங்களும் பெயர் தெரியாத பல பறவைகளும் விரிந்து கிடக்கும் அந்தத் தீவுதான், பிரபாகரன் தீவு என்று அழைக்கப்படும் லகூன் தீவு. மறைத்து வைக்கப்பட்ட ஒரு அழகைப் போல், ஒழிந்துகொண்டிருக்கிறது லகூன் தீவு. திருவாரூர் பக்கத்து மாவட்டங்களான தஞ்சாவூர், கும்பகோணம் மாவட்டத்துக்காரர்களில் அனேகம் பேருக்கே இப்படியொரு தீவு இருக்கிறது என்று தெரியாது. அதுதான் அதன் அழகும்கூட. மிகக் குறைவான சுற்றுலாப் பயணிகளுடன் மரங்களும் பறவைகளும் கடலின் பேரமைதியும் நம்மை ஒரு வித்தியாசமான அனுபவத்துக்கு அழைத்து செல்கின்றன.

அலையாத்தி மரங்களின் அழகே அவற்றின் வேர்கள்தான். பூமிக்குள் இருக்கிற ணி வேரில் இருந்து, ஈட்டி மாதிரி பிரியும் கிளை வேர் மேல் நோக்கி வளருகிறது. வானத்தைப் பார்த்து வேர் வளர்கிற ஒரே மரமாக அலையாத்தி மரங்கள்தான் இருக்கும் என்கிறார்கள். உவர் மண்ணில் பிராணவாயு குறைவாத்தான் இருக்கும். அதனால் காற்றில் இருக்கும் பிராணவாயுவை இழுக்கிறதுக்காக அலையாத்தி மரங்களின் வேர்கள் வெளியே நீட்டிக்கொண்டு வளர்கிறது என்கிறார்கள். இயற்கையின் அதிசயங்களில் இதுவும் ஒன்று. அலையாத்தி மரங்களில் ஆரஞ்சு நிறத்தில் பூத்திருக்கும் பூக்கள் இன்னும் கொள்ளை அழகாக இருக்கின்றன.

அலையாத்தி மரங்கள் தவிர நரி கண்டல், கருங்கண்டல், நீர்முள்ளி, திப்பாரத்தை, சுரபுள்ளி போன்ற அபூர்வமான சில மரங்களும் இங்கே இருக்கின்றன. இந்த மரங்கள் வேறு எங்கேயும் வளராது. இந்த மரங்களில் இருந்து வரும் காற்று நம்மை வருடிச்செல்லும் போது, அது நம் சுவாசத்துக்கு மிகவும் நல்லது என சொல்கிறார்கள். நீர்முல்லி செடி என்னும் அபூர்வமான செடியும் இங்கே உள்ளது. இந்தச் செடியின் இலைகள் பல மருத்துவக் குணங்களைக் கொண்டது என்கிறார்கள். ஸ்துமா, மூட்டுவலி, பாம்புக் கடி போன்றவற்றுக்கு இந்தச் செடியின் இலை மருந்தாக பயன்படுகிறது.

கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துகொண்டு வரும் பூநாரை, கூளக்கடா, நீர்க்காகம் ஊசிவால் வாத்து, குளத்து கொக்கு போன்ற பறவைகளை இங்கே எப்பொழுதும் பார்க்கலாம். சீசன் நேரங்களில் இன்னும் அதிகமாக விதவிதமான பறவைகள், பல நாடுகளிலும் இருந்து வந்து இங்கே சங்கமமாகின்றன. குறிப்பாக அக்டோபர் மாதத்திலிருந்து பிப்ரவரி மாதம் வரை லகூன் தீவே பறவைகளின் பிடியில்தான் இருக்குமாம். அப்பொழுது, நாம் இதுவரைப் பார்த்தேயிராத பலவ-ிதமான பறவைகள் கண்ணுக்கெட்டிய தூரங்களில் பறந்து திரியும். மொத்தமாக 147 வகையான பறவைகள் லகூன் தீவுக்கு வந்து போகின்றன என்கிறார்கள் வனத்துறையினர். பறவைகள் நிறைய இருந்தாலும் விலங்கினங்களைப் பார்ப்பது அபூர்வம். நரியைத் தவிர வேறு எந்த மிருகங்களும் இங்கே கிடையாதாம்.

லகூன் தீவு மட்டுமல்லாமல் பக்கத்திலேயே குட்டிக் குட்டித் தீவுகளாய்த் தெரியும் இதர மண் பரப்புகளிலும் தமிழக வனத்துறை அழகான குடில்களையும் மரப்பாதைகளையும் அமைத்திருக்கிறது. காடுகளுக்கு நடுவே போகிற அந்த மரப் பாதையில் துளியும் பயமின்றி குழந்தைகள் துள்ளி ஓடி விளையாடுகிறார்கள். அந்தளவுக்கு பாதை வசதிகளை பாதுகாப்பாக செய்திருக்கிறது வனத்துறை.

அந்தி மங்கும் நேரத்தில் சூரியன் லகூன் தீவை தங்கமாய் ஜொலிக்க வைக்கிறது. நான்கு பக்கமும் சூழ்ந்திருக்கும் தண்ணீர் தீவின் குளுமையை இன்னும் அதிகமாக்குகிறது. பிரிய மனமில்லாமல்தான் புறப்பட வேண்டும். னால், இங்கேயே இரவு தங்கிவிட்டும் போகலாம் என ஆசைகாட்டுகிறார்கள் படகுக்காரர்கள். முதலிலேயே திட்டமிட்டு வரும் நிறைய பேர், கூடாரம் அமைத்து குடும்பத்தோட தங்கிவிட்டு போகிறார்களாம்.

சரி, தீவின் அழகை ஆராதித்ததுப் போதும் பிரபா-கரன் தீவு எனப் பெயர் வந்தது எப்படி என்கிற விடயத்துக்கு வருவோம்.

### எப்போது செல்வது, எப்படி செல்வது? எங்கே தங்குவது?

இங்கே வந்திருக்கிறார். இந்தத் தீவிலும் அருகிலுள்ள முத்துப்பேட்டையிலும் இரண்டு நாள்கள் தங்கி, ஒரு அறுவை சிகிச்சை நிபுணரை ரகசியமா வரவழைத்து ஆபரேசன் செய்திருக்கிறார். திரும்பி செல்லும்போது, தீவில் இருந்த அபூர்வமான மூலிகைகளையும் சேகரித்துக்கொண்டு சென்றிருக்கிறார். அவர் வந்து போனதுக்குப் பிறகுதான், அவர் இங்கே வந்து போனதே பலருக்கும் தெரிய வந்திருக்கிறது. பிரபாகரன் மீது இந்தப் பகுதி மக்கள் நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அதன்பிறகு, "இது பிரபாகரனோட காலடிபட்ட மண்" என்று சொல்லி லூகூன் தீவுக்கு வருபவர்கள் எண்ணிக்கை அதிகமானது. இப்படியே பிரபாகரன் தீவு என்ற பெயரே நிலைத்துவிட்டது. புவியியல் வரைபடங்களில் லகூன் தீவு என்ற பெயர் இருந்தாலும் மக்களுக்கு பிரபாகரன் தீவு என்று சொன்னால்தான் தெரிகிறது.

எப்படி செல்வது, எங்கே தங்குவது?

திருவாரூரில் இருந்து 56 கிலோமீட்டர் தொலைவ-ில் உள்ளது முத்துப்பேட்டை. அடிக்கடி பேருந்து போக்குவரத்து உள்ளது. தனியார் வாடகைக் கார் எடுத்தும் பயணம் செய்யலாம். முத்துபேட்டையை நெருங்கும் போது சாலையில் இருபுறமும் தெரியும் உப்பளங்கள் பயணத்துக்கு அழகூட்டும். சென்னையில் இருந்து திருவாரூருக்கு தினமும் பேருந்து போக்குவரத்து உள்ளது. முத்துப்பேட்டையில் தங்கும் வசதிகள் இல்லாததால் திருவாரூரில் தங்கி சென்று வருவது நல்லது. தீவிலேயே தங்க விரும்புபவர்கள் அதற்கான முன்னேற்பாடுகளுடன் வரவேண்டும். தீவில் உணவு கிடைப்பது சிரமம். எனவே, திருவாரூரிலேயே பொட்டலம் வாங்கிக்கொள்ளவும்.

## வழிப்போக்கன்

விடுதலைப்புலிகளுக்கு தமிழகத்தில் தடை விதிக்காத காலம் அது. அப்போது புலிகள் பிரிவைச் சேர்ந்த பலர் இந்தத் தீவு பக்கம் வந்து இளைப்பறிவிட்டுப் போவார்களாம். ஒரு நாள் திடீரென்று பிரபாகரனே இந்தத் தீவுக்கு வந்தார். அவருக்கு காலில் ஏற்பட்டிருந்த ஒரு காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்வதற்காக பிரபாகரன்




# HomeLife GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

## எமது நிறுவனம் பற்றிய சில தகவல்கள்

- *3 Brokers to Help / Assit*
- *2 Branches in Scarborough & Mississauga*
- 140 இற்கு மேற்பட்ட வீட்டு முகவர்கள்
- *7 days open*
- *Verty convenient Locations*
- *Regular Training*
- *New Projects to Promote*
- நீங்களும் மதிப்பு மிகு வீட்டு முகவராக இணைந்து செயல்பட உங்கள்

தொடர்புகளுக்கு: 416.321.6969



Broker / Owner



Broker/Manager



Broker / Owner

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

**1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 28, Mississauga**

# சுமைகளை சுகங்கள் ஆக்குங்கள்

எனக்கு மட்டும் ஆண்டவன் இவ்வளவு கஷ்டத்தை கொடுத்திருக்கிறானே! இதுமாதிரி பலர் பல சந்தர்ப்பங்களில் சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். ஏதோ ஆண்டவன் எல்லோருக்கும் அளந்து அளந்து கஷ்டத்தைக் கொடுப்பது போலவும் ஒரு சிலருக்கு மட்டும் அளவேயில்லாமல் வண்டி வண்டியாக கஷ்டத்தை கொண்டு வந்து அவர்கள் வீட்டில் கொட்டி விடுவது போலவும் பேசுவது எவ்வளவு அபத்தமானது என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

வெயில் என்பது ஒரே அளவாகத்தான் காயும். தெருவில் வருவோர் போவோரை கவனித்துப் பாருங்கள். ஒருவர் என்ன மோசமான வெயில் எனக்கூறி நிழல் தேடி ஒதுக்கிடம் தேடுவார். இன்னொருவர் சே! என்ன ஒரேயடியாக இப்படிக் கொளுத்துகிறது என்று சொல்லி சோடாக் கடையில் சோடா வாங்கி குடிப்பார். மற்றொருவர் தள்ளாடி கீழே விழுந்து விடுவார். ஒருவர் மட்டும் எதையும் பொருட்படுத்தாமல் தன் வேலையை முடிக்க வேண்டி தெருவில் விறுவிறுவென்று நடந்து கொண்டிருப்பார். இப்போது சொல்லுங்கள் சூரியன் தன் வெப்பத்தை ஒருவருக்கு 22 டிகிரியாகவும், சோடா குடித்தவருக்கு 32 டிகிரியாகவும், மயங்கி விழுந்தவருக்கு 102 டிகிரியாகவும் தனித்தனியாகவா பிரித்துக் கொடுத்தது? இல்லை. தெருவில் விறுவிறுவென நடந்தவருக்கு மட்டும் தனியாக விசேடமாக குடைபிடித்ததா? சூரியன் தன் கடமையை ஒருவருக்கு கூட்டியும் மற்றவருக்கு குறைத்தும் செய்வதில்லை.

அதேபோலத்தான் ஆண்டவனும் தன் கடமையை செய்து கொண்டிருக்கிறார். முனுசாமிக்கு முப்பது கிலோ, நாராயணசாமிக்கு நாற்பது கிலோ என அவர் கஷ்டங்களை பிரித்தா கொடுக்கிறார். தாங்கும் சக்தி இல்லாத சிலர் கஷ்டம் வந்தபோது திட்டுகிறார்கள். இன்னும் சிலர் ஐயோ இவ்வளவு கஷ்டமா? என்று அங்கலாய்ந்து தலையில் கை வைத்து



உட்கார்ந்து விடுகிறார்கள். இன்னும் சிலர் தாங்கும் சக்தியின்றி ஒரேயடியாகப் படுத்து விடுகிறார்கள். மிகுந்த பக்தி கொண்டவர்கள்தான் தாங்கும் சக்தியோடு தடங்கல்களை பொருட்படுத்தாமல் தடையின்றி தம் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்கின்றனர். எனவே கஷ்டங்கள் என்பது கால் நடையாகப் போகிறவர்களுக்கும் உண்டு. காரில் போகிறவர்களுக்கும் உண்டு. அப்படியானால் கோயில் எதற்கு? தெய்வம் எதற்கு என்று வினவலாம்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்கும்போது ஒன்றின் அருமை தெரியாது. இல்லாத போதுதான் அதன் அருமை தெரியும். உப்பு என்பது நம்மைப் பொறுத்தவரை சாதாரண விடயம். அதைப்பற்றி பெரிதாக நினைத்துப் பார்த்து ஏங்கமாட்டோம். அதேவேளை மஞ்சட்காமாலை வந்தால் ஒரு மாதம் உப்பில்லாமல் பத்திய உணவு சாப்பிடும் போதுதான் உப்பு நமக்கு அமுதமாக தெரியும். அதற்காக ஏங்குவோம். இதேபோன்று கடவுளின் அருமையும் கஷ்டத்தில் தான் தெரியும்.

மனித மூளை அபாரமானது. வியத்தகு



சாதனைகளை அது புரிந்துள்ளது. காற்றில் ஏறி விண்ணை வெற்றி கொண்டுவிட்டான் மனிதன். கணினியை செயற்கை மூளை எனலாம். எனவே மனிதனது கண்டுபிடிப்புகள் அவனை கைகூப்பித் தொழ வைக்கின்றன. இருந்தும் அவன் கடவுளை நாட வேண்டியுள்ளது.

சைக்கிள் ஓட்டும் சாதாரண மனிதனிலிருந்து ஆகாய விமானத்தை ஓட்டும் பைலட் வரை கடவுளை வணங்க கோயிலுக்கு செல்கிறார்கள் என்பதிலிருந்து அவரவர் நிலைக்கு ஏற்ப ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு குறையை வைத்திருப்பது புலனாகிறது. கஷ்டப்படாத மனிதன், கவலையில்லாத மனிதன், தோல்வி காணாத மனிதன் இவ்வுலகில் இல்லவேயில்லை.

எனவே சுமைகளை சுகங்களாக நினைக்கும் மனப்பக்குவமும் வந்து விட்டால் போதும். சுமைகள் நாளடைவில் மறைந்தே போகும். அதற்கு ஒரேவழி பக்திதான்.


வாழ்க்கையில் நாமே நமக்கே ஏற்றிக்கொள்ளும் சுமைகள் தான் அதிகம். அவை சீனப்பெருஞ்சுவர் போல நீண்டு செல்லும். தூக்கமுடியாத அளவிற்கு சுமைகளை தூக்கிக் கொண்டு ஏன் நாம் அலையவேண்டும். அவற்றை இறக்கி வைக்கத்தான் ஆண்டவன் அடியினை நாடுகின்றோம். அப்பொழுது ஆனந்த சுகம் கிட்டும்.

தாய் கருவை வயிற்றில் பத்துமாதம் சுமக்கிறாள். பிறந்தபின் சேயை தந்தை தோளில் சுமக்கிறார். எல்லோரும் ஏதாவது ஒரு சுமையை உள்ளத்திலே சுமந்து கொண்டே இருக்கிறார்கள். எனவே அனைவரும் சுமை தாங்கிகளே. சுமை தாங்கிக்கல் தலைச்சுமையை இறக்கி வைக்க உதவுகிறது. ஆண்டவன் அடியிணைகள் அகத்தின் அல்லலை ஆற்றுவதற்கு ஆதாரம் ஆகின்றது.

*நிலவு அழுது புரள்வதில்லை நாளை அமாவாசை வருகிறதே என்று*
*தேம்பி அழுவதில்லை தேய்பிறை தூங்குகிறதே என்று*
*வளர்ந்து தேய்ந்து மறைந்து தலைதூக்கும் நிலவைவிட சிறந்த ஆசான் நமக்கு யார்*
*பௌர்ணமி என்று பல்லிளிக்காதே அது தேய்பிறைக்கு அச்சாரம்*
*அமாவாசை என்று அலட்சியப்படுத்தாதே அது வளர்பிறைக்கு அத்திவாரம்.*



**நா. க. சிவராமலிங்கம்**

# தாயின் இரு தவறுகள்

## ஓடும் நீர் உறைவதில்லை 78

ஒரு குழந்தையின் வளர்ச்சியில் அதன் பிறப்பில் இருந்து அதிமுக்கிய செல்வாக்கைச் செலுத்துபவர் அதன் தாய். இயற்கையின் கொடைகளில் அதி புனிதமான கொடையாக அமைந்திருப்பது தாய்மை ஒரு உயிர் அதன் வாழ்நிலைக்கு வந்தது முதல் ஒரு தாயின் அர்ப்பணிப்பு என்பது விலை மதிக்க முடியாதது. ஒருவரது உண்மையான அர்ப்பணிப்பு என்பது தாய்மை தவிர்ந்த ஏனைய விடயங்களில் ஒருவித அளவீட்டுத்தன்மைக்குள் உட்படக்கூடியது. ஆனால் தாயின் அர்ப்பணிப்பென்பது ஈடு இணையற்ற ஒன்றாக அமைந்துள்ளது. இயற்கையின் அளப்பரிய கொடை எனலாம்.

நாம் பிறந்தவுடன் நமது முதலாவது உணவு கூட எங்கே எப்படிப் பெறுவது என்ற முன்னுணர்வின்றிப் பிறக்கின்றோம். விலங்கினங்களைப் பொறுத்தவரையில் அவை இயல்பாகவே தமது உணவை எங்கு எப்படிப் பெறுவது என்பதை இயல்பு நிலையாகக் கொண்டு பிறக்கின்றன. ஆனால் மனிதனுக்கு தாயானவள் அந்த வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் தான் மனிதப் பிறப்பின் ஆரம்பம் முதல் ஒரு தாயின் உள்ளுணர்வு, முன்னுணர்வு என்பன இயற்கையில் இருந்த பங்களிப்பாக அமைந்துள்ளது.

ஒரு குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாகத் தாயின் ஆரம்பகால நடவடிக்கைகள் உடல் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக அமையும். மிகவும் உடல் நலம் மிக்க குழந்தையாக வளரவேண்டும் என்பதில் அதி முக்கிய கவனம் செலுத்தப்படும். குழந்தைகளின் தூய பார்வையும் சிரிப்பும் அதன் புனிதமான இதயத்தின் வெளிப்பாடாக எல்லோரையும் கவர்ந்து விடுகின்றது. இந்தக் கவர்ச்சியின் தன்மையானது உடலியல் ரீதியாக மேலும் பல சிறப்புத் தன்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்பது ஒரு தாயின் ஆரம்பகால விருப்பமாக அமைகின்றது. தனது குழந்தை அழகான குழந்தை என்று மற்றவர்களால் பாராட்டுப் பெறும்போது ஒரு தாய்க்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு நிகராக எதுவும் இருப்பதில்லை.

குழந்தை வளர்ப்பில் ஒரு தாய்க்கும் தந்தைக்கும் இடையில் அடிப்படை வேறுபாடு ஒன்று உண்டு. தாயின் ஆரம்பகாலக் கவனிப்பின் அதி பெரும்பாலானவை உடல் வளர்ச்சி சார்ந்தாகவும் தந்தையின் ஈடுபாடுகள் உளவியல் வளர்ச்சி சார்ந்ததாயும் அமையும். ஒரு குழந்தையின் உளவியல் வளர்ச்சியில் தாயின் பங்கு பாசம் என்ற சுயநலம் சார்ந்த நடவடிக்கையால் மட்டுப்படுத்தப்படுகின்றது. இங்கே ஒரு தாயின் பாடம் என்பது தனது குழந்தைகளுக்கு மட்டுமே உரியதாக்கப்படுவதாகும். ஏனெனில் ஒரு தாய் தனது பாசத்தின் பயன்பாட்டைத் தனது குழந்தை மீது பிரயோகிக்கும் அளவிற்கு தனது குழந்தை அல்லாத குழந்தைகளிடம் பிரயோகிப்பதுதில்லை. பிரயோகிக்க விரும்புவதுமில்லை. எனவே தாய்ப்பாசம் என்பது முற்றுமுழுதும் தனது குழந்தைகள் சார்ந்த சுயநலத் தன்மை கொண்டதே. இந்தச் சுயநலமே நம் ஒவ்வொருவரையும் உயிர் வாழ வழிவகுத்துள்ளது என்பதையும் நாம் மறந்து விடலாகாது. தாய்ப்பாசம் என்பது மனிதனுக்கு மட்டுமானதல்ல. உயிரங்கள் அனைத்துக்கும் பொதுவானது. ஆனால் முற்றிலும் சுயநலமானது. தனது குழந்தை என்பதில் உருவாகும் அளவு கடந்த பலமே இந்தச் சுயநலத்திற்கான காரணமாகும். இதனால் தான் ஒரு தாயின் செயற்பாடுகள் தனது குழந்தையின் வளர்ச்சிக்கு எந்த வகையான பங்களிப்பைத் கொடுத்தல் வேண்டும் என்பது அறியப்படவேண்டியதாகின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு; வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

**KG Master**-kgmaster@rogers.com

ஒரு குழந்தை அதன் வளர்ச்சிக் காலத்தில் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை என்னவெனில் 'தாய் ஒருபொழுதும் தவறுகள் செய்வதில்லை' (Mother never make mistakes). ஒரு தாயானவள் தனது குழந்தையைப் பொறுத்தவரையில் எந்தத் தவறும் செய்வதில்லை என்பது ஒவ்வொரு குழந்தையும் கற்றுக் கொள்ள வேண்டிய முதலாவது விடயமாகும். இது தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலான விடயம் மட்டுமே. ஒரு குழந்தையின் உளவியல் மனோபாவ வளர்ச்சியில் தந்தையின் பங்களிப்பு அதேயளவு முக்கியத்துவத்தைப் பெற வேண்டும் என்பதையும் ஒரு தாய் குழந்தையின் ஆரம்பகால வளர்ச்சியிலிருந்து கவனத்திற்கு கொள்ள வேண்டியதாகின்றது. தாய்ப்பாசம் என்ற வரைய-றையற்ற அன்புப் பெருக்கமானது குழந்தைகளில் மனோபாவ வளர்ச்சியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடாது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு குடும்ப அமைப்பில் ஒரு தந்தையின் அதி முக்கியமான பொறுப்பு என்னவெனில் தமது குழந்தைகளின் உயர்ந்த மனோபாவ வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணிப்பதாகும். நடைமுறையில் ஒரு குடும்பம் தான் பல்வேறு விடயங்களுக்கும் தேவைகளுக்கும் தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தும் ஒரு தந்தை தனது குழந்தைகளின் எதிர்காலத்துக்கு அவசியமான அடிப்படை மனோபாவங்களின் விதைப்பாளராக இருத்தல் வேண்டும். ஒருதாய் தனது குழந்தைக்கு உணவுடன் பாசத்தையும் ஊட்டுவது போல் ஒரு தந்தை உயர்ந்த மனோபாவங்களை ஊட்டுதல் வேண்டும். ஒரு குழந்தையிடம் உயர்வான மனோபாவங்களை உருவாக்குவதில் தந்தையின் பங்களிப்பே மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் ஒரு தாயின் பாசம் என்ற அன்புணர்வானது ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் குழந்தைகள் அறிவியல் மனோபாவ ரீதியாகத் தம்மை விருத்தி செய்வதற்குத் தேவைப்படும் சிறு சிறு வலிகளுக்கு இடமளிப்பதில்லை. இதனால் குழந்தைகள் தாழ்வு மனப்பான்மையும் தன்னம்பிக்கையற்றவர்களாவும் வளர்க்கப்படு கிறார்கள். அதாவது இக்குழந்தைகள் உடல் வலிமையில் உற்சாக-மாகவும், உளவலிமையில் நலிவடைந்துள்ளவர் களாக வளர்க்கப்படுகிறார்கள்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது குழந்தைகளின் உயர்ந்த மனோபாவ வளர்ச்சிக்குத் தாம் தடையாக இருக்கின்றோமே என்பதைத் தாய்மார்கள் உணர்ந்து கொள்வதில்லை. உண்மையில் ஒரு குழந்தையின் தொடர்ச்சியான வளர்ச்சியானது ஒரு தாயின் பார்வையில் மாற்றத்தைக் கொடுப்பதில்லை. தனது குழந்தை எந்த வயதை அடைந்தாலும் குழந்தையாகவே கருதும் தாயின் உள்ளம் இதற்குக் காரணமாகும். ஆனால் ஒரு தந்தை தனது குழந்தைகளின் வளர்ச்சியில் ஏற்படும் உடலியல், உளவியல் வளர்ச்சி பற்றிய மாற்றங்களை அறிந்து கொள்கிறார். இதனால் தான் குழந்தை வளர்ப்பில் தாயும் தந்தையும் இரு வேறுபட்ட பார்வையுடன் ஈடுபடுகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அது குழந்தையானாலும் சரி குமரானாலும் சரி, ஒரு முன்னோடி அல்லது வழிகாட்டி அவசியமானதே. இந்த முன்னோடி அல்லது வழிகாட்டி என்பது ஒரு குழந்தைக்கு அதன் தந்தை என்பது மாற்றுக் கருத்துக்கு உட்படாததாகும். அதாவது தந்தையே ஒரு குழந்தையின் முதலாவதும் முதன்மையானதுமான வழிகாட்டி. இந்த வழிகாட்டிக்கு அல்லது வழிகாட்டலுக்குத் தடையாக அக்குழந்தையின் தாய் தன்னையறியாமல் செயற்படுவது தவிர்க்கப்பட வேண்டியதே. ஒரு தாயானவள் பாசம் என்ற பலவீனத்தால் தந்தையின் வழிகாட்டலுக்குத் தடை போடும் தவறுகளில் இரண்டு தவறுகள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதும் அத்தவறுகளை இனிமேலும் தொ-டராமல் கவனித்துக் கொள்ளல் வேண்டும் என்பதும் எனது முக்கிய எதிர்பார்ப்பாகும்.

ஒரு தாயின் முதலாவது தவறு என்பது தனது குழந்தையின் தந்தை குடும்பத்தின் தலைவர் மட்டுமல்ல ஒரு சிறந்த வழிகாட்டி என்பதையும் பிள்ளைப் பாசத்தினால் புறக்கணிப்பதாகும். இந்தப் புறக்கணிப்பானது தனது கணவனின், குழந்தைகளின் தந்தையின், குடும்பத்தின் தலைவனின் மதிப்புக்கும் மரியாதைக்கும் பங்கம் விளைவிப்பதாகும். அதாவது தனது கணவனின், குழந்தைகளின் தந்தையின் செயற்பாடுகளைக் குழந்தைகளுடன் சேர்ந்து குறை கூறுவதும், குறைத்து மதிப்பிடுவதும் குழந்தைகளின் மனம் புண்பட்டுவிடுமோ என்ற எண்ணங்களால் தந்தையின் செயற்பாடுகளின் தரத்தை மறைப்பது அல்லது மறுப்பது என்பன தந்தையானவர் சிறந்த மனோபாவங்களைக் குழந்தைகளிடம் விதைப்பதற்குத் தடையாக அமைகின்றன. இன்னொருவகையில் கூறுவதாயின் ஒரு தாய் தனது பிள்ளைகளின் தந்தையைப் பற்றி குழந்தைகளிடம் குறை கூறுவதும், குழந்தைகள் முன்னிலையில் தனது கணவனைக் குறைவாக மதிப்பிடுவதும் சில சிலசந்தர்ப்பங்களில் குழந்தைகளிடம் தந்தையை பாராட்டுவதும் குழந்தைகளுக்குத் தமது தந்தை மீது உருவாக்கப்பட வேண்டிய மதிப்புக்கும் மரியாதைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக அமைகின்றது.

பல சந்தர்ப்பங்களில் குழந்தைகள் சார்பான பார்வையில் தாய்க்கும் தந்தைக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பது தவிர்க்கமுடியாததே. தாய் உடல் வளர்ச்சியில் அதிக கவனமும் தந்தை உளவளர்ச்சியில் அதிக அக்கறையும் கொள்ள வேண்டி இருப்பதால் ஒரு தாய் தனது பாச உணர்வால் சிறந்த மனோபாவ வளர்ச்சிக்குத் தேவைப்படும் தந்தையின் செயற்பாடுகளுக்குத் தடைபோடுவது குழந்தைகளின் எதிர்காலத்தை நிகழ்காலத்தில் அழிப்பதாக அமைந்து விடும். ஒரு தந்தையின் செயற்பாடுகள் குழந்தைகளின் சிறப்பான எதிர்காலத்துக்கான அத்திவாரமாக அமைவது அவசியமாகையால் தாயானவள் தனது கணவனது செயற்பாடுகளையும் வழிப்படுதல் களையும் சிறப்புப்படுத்திக் குழந்தைகளிடம் அவ்வாறான பெறுமதிகளை நடைமுறைப்படுத்து வதற்கு ஒத்துழைத்தல் வேண்டும். அதாவது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குழந்தைகளின் முன்னிலையில் தனது கணவனைக் குறை கூறுவதும் குறைவாக மதிப்பதும் முழுமையாகத் தவிர்க்கப்படல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் தனது கணவர் ஏதேனும் தவறு செய்திருப்பின் அதைத் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடல் வேண்டுமே தவிர குழந்தைகளின் முன்னிலையில் பிழை தவறு எனக் கூறுவது ஒரு வழிகாட்டியின் தரத்தை களங்கப்படுத்துவதாக அமையும். எனவே குழந்தைகளின் எதிர்கால நன்மை கருதியும் சிறந்த மனோபாவ வளர்ச்சிக்கு உதவவும் ஒரு தாயானவள் தனது குழந்தைகளின் தந்தையின்நிறைவுகளை சிறப்புக்களையும் மட்டும் குழந்தைகளுடனும் குறைகளைக் கணவனுடனும் தனித்தனியாகப் பகிர்ந்து கொள்ளல் வேண்டும்.

ஒரு தாயின் இரண்டாவது தவறு என்னவெனில் குழந்தைகள் சார்பான தவறான அல்லது நேர்த்தியற்ற விடயங்களைத் தான் அறிந்திருந்தும் அவற்றைத் தனது கணவனுக்குக் கூறாமல் மறைப்பதாகும். இவ்வாறான விடயங்கள் குழந்தைகளின் தந்தைக்குத் தெரிந்தால் பிரச்சினைகள் உருவாகிவிடுமோ என்ற அச்சமும் தவறு என்று தெரிந்தும் தண்டிக்கப்படுவதால் தனது குழந்தையின் மனநிலை பாதிக்கப்பட்டு விடுமோ என்ற எண்ணமும் காரணிகளாகின்றன. இன்றும் சிலர் தமக்கிடையே உருவாகியுள்ள பிரிவுக்குத் துணையாகத் பிள்ளைகளைத் தமது பக்கம் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக அவர்களைக் கண்டிக்க விரும்பாது மறைத்து விடுகிறார்கள். ஒரு தாய் குழந்தைகள் தொடர்பான விடயங்களை மறைப்பாராயின் அங்கே ஒரு எதிர்மறையான சூழலுக்கு ----- அமையும். குழந்தைகள் தமது பெற்றோர் களுக்கிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு சிறந்த தொடர்புபடுத்தல் என்பன இல்லை என்பதை அறிந்து மேலும், மேலும் தவறுகளைச் செய்வதற்கு முயற்சிப்பார்கள்.

ஆம் வாசகர்களே!

நமது குழந்தைகள் எதிர்காலத்துக்கான நமது தகவல்கள் நேர்மையும் நெஞ்சுறுதியும், சிறந்த தன்னம்பிக்கையும் கொண்டவர்களுக்கே எதிர்காலம் சொந்தமாகின்றது. அதற்கேற்ற வகையில் குழந்தைகள் வளர்க்கப்படல் வேண்டும். ஒரு குழந்தை நல்லவராவதும் கெட்டவராவதும் தாயின் வளர்ப்பால்தான் தந்தையைக் குறைவாக மதிப்பதற்கு வாய்ப்பளிக்காமல் இருந்தாலும் குழந்தைகளின் குறைபாடுகளைத் தந்தைக்கு மறைக்காமல் பகிர்ந்து கொள்ளலாம். சிறப்பான குழந்தைகளை எதிர்காலத்திற்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3223

**On TV**

Saturdays at 10:30 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# HOMELIFE/GTA Realty Inc., Brokerage*



**Seelan Siva Aiyadurai**
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

**Uthayan Aiyadurai**
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



*"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"*

**IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME**

## HERE IS YOUR CHANCE TO WIN







**$354,900**




**Bovaird/Hwy 7**
Well Maintained, Full Brick
4 Br Detached, Lovely Open Concept
Minute Walk To Catholic And Public
Schools, Good Location

**$149,900**




**Morningside/Ellesmere**
Very Good Location
2 Bedrooms, Luxury Mapledale Condo,
Bright And Spacious Corner Unit,
Close To All Amenities

**$135,000**



**Neilson/Mclevin**
2 Bedroom Condominium
corner Unit, 24 Hr Security
One Parking Space , Good Location

**$49,900**




**Birchmount/Lawrence**
Auto Parts Wholesale/Retail Business
Well Maintained High Ceiling Warehouse
Industrial/Commercial Unit

**$269,900**



**Kennedy/Dennsion**
Well Maintained New Condo
2 +1 Bedroom Condominium
2 full Washrooms,Beautiful Lay Out
Parking Spaces , Good Location,
All Brand New appliances

**$49,900**



**Markham/Eglinton**
Nicely Setup Take Out/ Restaurant In
Busy Location, All Chattels, Equipment
In Good Condition, Monthly Rental $1990 Plus
Utilities For First Year

**$208,900**



**Mccowan/401**
Very Good Location
2 Bedrooms, Built by Tridel
Prestigious Neighborhood, Two Separate
4Pc Washrooms, 2 Car Parkings
Close To All Amenities

**$218,900**



**Kenney/St Clair**
3 Bedrooms Condominium, 2 Washrooms
Town House Prime Location With
Easy Access To T.T.C, Good Location

**$239,000**



**Thickson Rd/Dryden Blvd**
Well Maintained
3 +1 Bedroom Semi-Detached
3 Washrooms, Beautiful Lay Out,
Good Location

**$249,900**



**Birchmount/Ellesmere**
Well Maintained New Condo
2 Bedrooms Condominium
2 full Washrooms,Luxury Tridel Building
With Panoramic View,
All Newer Appliances

**$269,000**



**Markham/Denison**
Well Maintained Large 3 Bedrooms And
2 Full Washrooms Condo Unit, Newer Paint,
Close To All Amenities, Good Location.

**$286,900**



**Eglinton/Bellamy**
Very Good Location, Condo Townhome
3 Bedrooms, 3 Washrooms
Custom Made Maplewood New Kitchen
Close To All Amenities

**$309,900**



**Mccowan/Finch**
3+1 Bedrooms Link Home
Lots Of Upgrades, Very Good Neighborhood
Close To Schools, Mall, Library, Ttc.

**$320,000**



**Brimley/Eglinton**
Well Maintained
3+2 Bedroom Condominium
2 Washrooms, Beautiful Lay Out
Sep Entrance , Good Location

**$349,900**



**14th/9th Line**
Well Maintained New Condo
3 +1 Bedrooms Semi Detached
3 Washrooms, 'Green Park Built' Fully
Upgraded Home, Granite Countertops
Newer Appliances

**$489,000**



**14th Ave/9th Line**
Luxury Living In Brookfield's Model Home
4+1 Bedrooms Detached, 2 Kitchens,
4 washrooms, Tons Of Upgrades
Schools, Good Location

**$569,000**



**Bayview/Major Mackenzie**
High Demand Location. 4 Br Plan. 2 Huge Mbr.
Bayview Secondary School Area, Steps To
Elementary Schools, Park, Close To Shops &
Community Center. No Side Walk.
Double Door Entrance

**$579,000**



**Islington/Rutherford**
4 Bedrooms, 3 Washrooms Detached Home
A Show-Piece Home, Absolutely Stunning,
Approx. 2800 Sq. Ft.

**$629,000**



**Steeles/Midland**
Well Maintained 4 +1 Bedrooms
Detached Home 4 Washrooms,
Brand New Detached House With
Double Attached Garage In Great Location

**For Sale or Rent**




**Middlefield/Finch**
Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parking

**1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3**

**Bus:(416)321-6969**

This is not intended to solicit properties currently listed for sale.
*Independently Owned and Operated
*Some Conditions Apply

# நாகரிக கோமளி

## என்.எஸ்.கிருஸ்ணன் நூற்றாண்டு சிறப்புக் கட்டுரை

டி.கே.எஸ். சகோதரர்கள் குழு காரைக்குடியில் நாடகங்களை நடத்தி வந்த சமயத்தில் ஒரு நாள், குழுவின் பிரதான நடிகரான எம்.ஆர். சாமிநாதன் காணாமல் போய்விட்டார். அப்போது நடந்து வந்த "மனோகரா" நாடகத்தின் பிரதான பாத்திரமான வசந்தன் வேடத்தில் சாமிநாதன்தான் நடித்து வந்தார். எந்த தகவலும் இல்லாமல், திடீரென்று அவர் காணாமல் போகவே என்ன செய்வதென்று தெரியாமல் டி.கே.சங்கரன் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். அன்று மாலை நாடகம் நடக்க வேண்டும்.

அப்பொழுது அருகில் இருந்த டி.கே.சண்முகம், "சாமிநாதனுக்கு பதிலாக வசந்தன் வேடத்தில் நடிக்க நம்மிடம் ஒரு இளைஞன் இருக்கிறான். அதனால் தாங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை" என்று சொன்னதும் சங்கரன் ஆறுதல் அடைந்தார். அதுவரை சிறிய வேடங்களிலேயே நடித்து வந்த அந்த இளைஞனுக்கு பிரதான நகைச்சுவை வேடத்தில் தான் நடிக்கப்போவதை அறிந்ததும் அளவற்ற மகிழ்ச்சி. ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை அதற்குப் பதிலாக தன் திறமையை நடிப்பில் காட்டினான். அதைப் பார்த்த டி.கே.எஸ்.குழுவினர், இனி வசந்தன் வேடத்தில் அந்த இளைஞனையே நடிக்க வைப்பது என்று முடிவு செய்தனர். அந்த இளைஞன்தான், பிற்காலத்தில் தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு நகைச்சுவை சாம்ராஜ்யத்தை நிறுவி அதில் வெற்றிக்கொடி நாட்டிய என்.எஸ்.கிருஸ்ணன்.

தமிழர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த மக்கள் கலைஞன், "கலைவாணர்" என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட என்.எஸ்.கிருஸ்ணனின் நூற்றாண்டு இது. 1908ம் ஆண்டு 29ம் தேதி பிறந்த என்.எஸ்.கே, தன் கடைசி காலம் வரைக்குமான, அடுத்த 49 ஆண்டுகளில் செய்துவிட்டுப் போன கலைத்துறை சாதனைகளை நினைவுகூற வேண்டிய தருணம். கூத்தாடிகள், குறை மனிதர்கள், அரிதார வேலைக்காரர்கள் என சமுதாயத்தில் நடிகர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்ட காலகட்டத்தில், தன் வாழ்க்கை மூலம் அந்தக் கருத்தை மாற்றியதுடன், மக்களுக்குத் தொண்டு செய்யப் பிறந்தவர்கள் அவர்கள் என்ற நிலையையும் உருவாக்கிவிட்டுச் சென்றவர் என்.எஸ்.கே. நகைச்சுவை நடிகர், பாடகர், மனிதாபிமானி, சீர்திருத்தவாதி என பன்முகம் கொண்டவர். நாடகக் கொட்டகைகளில் சோடா விற்றுக் கொண்டிருந்த சிறுவன் என்.எஸ்.கிருஸ்ணன், கலை உலகின் தனிப்பெரும் சக்ரவர்த்தியாக வளர்ந்து, வாழ்ந்த வரலாறு, தமிழ்த் திரையுலக சரித்திரத்திலேயே தனியொரு பாகம். அதிலிருந்து சில துளிகளை பார்ப்போம்.

